T03938
R001J01

# சிஷ்ய ஞான தீபம்

With the best Compliments
of the Translator.

—

M.R.Ry. V. Viswanatha
Iyer Avl.

31

3938

ஸ்ரீமத் யோகீஸ்வரானந்த ஸ்வாமிகள்.

ஓம் தத் ஸத்

# சிஷ்ய ஞான தீபம்

இது

ஸ்ரீமத் யோகீஸ்வரானந்த ஸ்வாமிகளால்

ஆங்கிலத்தில் எழுதப்பட்டு

ஆசிரியர் - தே. வீரராகவையங்காரவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

போதகாசிரியர் - நாராயணசாமி ஐயர் அவர்களா

பரிசோதிக்கப்பட்டு

அலசூர் - ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரால்

சென்னை :

ாது அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது

---

காபி ரைட்

ரிஜிஸ்டர்ட்

1932

# முன்னுரை

ஸ்ரீமத் யோகீஸ்வரானந்த ஸ்வாமிகள் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்றிருக்கும் சமய நூல்களை யாவருமறிவார்கள். ஆனால் இவ்வரிய நூல்களை நம் தாய்ப்பாஷைகளில் மொழி பெயர்த்துப் பலர்க்கும் பயன்படும்படிச் செய்ய வேண்டுமென்று நெடுநாட்களாகப் பலர் எண்ணினர். அவர் எண்ணம் நிறைவேற இப்போதுதான் சமயம் வாய்த்தது என்பது, இச்சிஷ்யஞான தீபமென்னும் அரிய நூல் தமிழில் வெளிவந்ததால் நன்கு விளங்கும்.

இவ்வரிய நூலைத் தமிழில் ஆர்வத்துடன் மொழிபெயர்த்துதவிய ஓமலூர் V. C. ஐஸ்கூல் ஆசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ தே. வீரராகவ ஐயங்கார் அவர்களுக்கும், தம் சரீரசிரமம் பாராமல் இதைப் பரிசோதித்துத் தந்த ஹைதராபாத் நைஜாம் காலேஜ் போதகாசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ M. V. நாராயணசாமி ஐயர், M. A., B. L., L. T. அவர்களுக்கும், இந்நூலைச் சென்னையில் அச்சிட்ட காலையில் அச்சுப் பிழைகளைத் திருத்தியுதவியும் இன்னும் சில உதவிகளைப் புரிந்துமுள்ள சில நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் புகழ் எங்கும் பரவுக.

ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்து அங்கத்தினர்கள்,
அலசூர் - பங்களூர்.

ஓம் தத் ஸத்.

# சிஷ்ய ஞான தீபம்

## ஞானசாரியருக்கு உரிய மரியாதை

எல்லா வகையாலும் நாம் நமது ஆசாரியர்களைப் பூசிக்க வேண்டும். மேலும், அவர்களுள், கடவுளை யடையும் நெறியை நமக்குக்காட்டி அந்நெறியினின்றும் வழுவாமல் ஊன்றிச்செல்லும்படி உதவிபுரிவோர்களை மிகவும் போற்றவேண்டும். ஒருதகப்பன் தன் குழந்தை யினது நல்வாழ்வில் எடுத்துக் கொள்ளும் ஊக்கம் போன்று, நமது உயரிய ஞான வாழ்க்கையில் ஊக்கங் கொள்ளும் ஒரு மகாத்மாவினது துணையின்றி ஞான நெறியில் நம் முன்னேற்றம் யாதா யிருக்கவேண்டும்? அந்நெறியோ அல்லலும், அந்தகாரமும் நிறைந்ததாக விருக்கிறது. சந்தேகமும், சஞ்சலமும் நம்மை ஒவ்வொரு நிலையிலும் தடைப்படுத்துகின்றன. ஜாக்கிரதையும், பாதுகாப்பும் அற்றோரை அழிக்கும்பொருட்டு, எதிர் பாராத மூலைமுடுக்குகளி லெல்லாம் மயக்கமாகிற வலைகள் விரிக்கப்பட் டிருக்கின்றன. நமது யாத்திரையின் முடிவிடத்திற்குத் தமதுகையில் ஞான தீபத்தைக் கொண்டு நம்மை அழைத்துச் செல்கின்றவரே ஞானசாரிய ராவர். ஆதலால் நம்மை நன்னெறிக்கண் உய்க்கும் அத்தகைய ஞானசாரியருக்கு உரிய மரியாதையைப் போதிய அளவு செய்து நன்றியறி

வுள்ளவராக இருத்தல் வேண்டும். இதைச் சொற்க ளாற் புகழ்ந்துரைத்தல் முடியாது.

இந்து மதமானது நமது ஞானசாரியரை வந்தனை வழிபாடுகள் செய்து கௌரவிக்க வேண்டுமென்று போதிப்பதுட னில்லாது, அவரை உலகிற் றோன்றிய கட்புலனாகும் கடவுளெனவும் கருதி வழிபட உபதே சிக்கின்றது.

ஒரு உபநிடதத்தில்:—

𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍁𑌰𑍌 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌕𑌥𑌿𑌤𑌾𑌃 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍍𑌤𑍇
𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

"எவனொருவன் கடவுளிடத்தும் ஞானசாரிய ரிடத்தும் தீவிரமான பக்தியுட னிருக்கின்றானோ, அந்த மகாத்மாவிற்கே உபநிடதங்களின் போதனைகள் விளக்கமாகும்" என்று சொல்லப்பட் டிருக்கிறது.

உயிருடன் திகழும், மிகுந்த சக்திவாய்ந்த ஒரு ஆசானது உபதேசங்களும், அவரது சேர்க்கையும், ஒரு சீடனது வாழ்க்கையைச் சீர் செய்வதில் மிகுந்த திறனுடையவை என்பதிற் சிறிதும் சந்தேகமில்லையா யினும், கடவுளிடம் மாத்திரம் காட்டுவதற் கென்றி ருக்கும், உயர்ந்த வந்தனை வழிபாடானது என் ஞான சாரியரது பாதத்திலும் சமர்ப்பிக்கப்படவேண்டுமென் பதை எளிதிலறிய இயலாது. சாமானிய ஜனங்களை விட அவர் எவ்வளவுதான் உயர்ந்தோ ராயினும், நமக்கு அவர்மாட்டுள்ள நன்றியறிதலானது எவ்வளவு தான் மிகுந்ததாயினும், நம்போன்ற கடவுட் சிருட்டியி லொருவரைக் கடவுளுக்கு இணையாகக் கருதுவது, மனி

தனைத் தெய்வமாகப் பாவிப்பதாக நேருமல்லவா? மனித வர்க்கத்தாரைத் தெய்வமாகக் கருதுவது தற்காலத்தவருக்கு வெறுப்பை யுண்டு பண்ணும்.

ஆழ்ந்த நோக்கத்தை யுடைய அநேக அறிஞர்களால் ஆக்கப்பட்டதும், தமது ஆன்மப்பயிற்சி நிகழ்ச்சி முறையின் அடிப்படையுமாகிய இந்துமத சித்தாந்தங்களுக் கெதிரிடையாகக் குணதோஷங்கள் கூறப்புகுமுன், ஒருவர் சிறிது நிதானித்து யோசனை செய்து, கடவுளைப்பற்றிய அபிப்பிராயங்களையும், அவற்றையடிப்படையாகக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் அந்தத்தையும் ஆராய்ந்தறிய வேண்டும். யாதானுமோர் சித்தாந்தத்தை அனுட்டிக்கும் ஜனங்களின் மனப்பான்மையை யறியவிரும்பின், மாசற்ற, கருணைமிக்க மனதுடன் ஆராய்ந்தா லல்லது, ஏன் அந்தச் சித்தாந்தமானது அச்சாதியாருக்கு மனோஹரமா யிருக்கின்றதென்றும், தம் கொள்கைகளில், ஏன் அதை முக்கியமானதாகக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் ஒருகாலத்திலும் அறிய முடியாது.

இந்துமதக் கொள்கைப்படி கடவுள் உலகிற்கு முதற்காரணமாவர். என்றும் மாறாத நித்தியமான கடவுளால், கால, இட, நிபந்தனைகளுக் குட்பட சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகமானது சதா மாறிக்கொண் டிருக்கும் ஓர் திரையாகும். நம்முன் தோன்றும் இவ்வுலகத்திற்குத் தனியான இருப்பு கிடையாது. அது ஈஸ்வரனுள்ளும் ஈஸ்வரன் மயமாயும் அமைந்துள்ளது.

மனிதன் இப்பிரபஞ்சத்தின் ஓர் அம்சமாவான். ஆயினும், அவன் இயற்கையானது பிரபஞ்சத்தின்

ஏனைய அம்சங்களின் இயற்கையைவிட வித்தியாசமா யிருப்பதால் அவனை ஜகத்தினனாகக் கொள்ளினும் அவனதைச் சேர்ந்தவனல்ல. மனிதனுக்குப் பகுத்தறிவு என்ற சக்தியும், தன்னைத்தானுணரும் சக்தியும், தான் என்னவா யிருக்கின்றான் என்றும், எதுவா யிருக்க வேண்டு மென்று உணரும் சக்தியும்தான் எதுவாகவில்லையோ அதையடைய முயற்சிக்கும் சக்தியும் உண்டு. ஆகையினால் மனிதனது இயற்கையில் ஓர் அமைதியின்மையும், அதன் பயனாக மாறுமியல்புள்ள உலகத்தி லுள்ள பொருள்களிடத்தும், சகோதர மானிடர்களது உறவினிடமும் ஓர் அதிருப்தியு முண்டாகிறது. வாழ்க்கை இன்பங்களை அனுபவித்து வருங்காலத்திலேயே மனஅதிருப்தியினால், அடிக்கடி, அவம்! அவம்!! எல்லாம் அவமே!!! மாயை! என்று கத்துகிறான். என்றுமழியா இணையற்ற ஒய்வைப்பெறும் பொருட்டு, பிரபஞ்சத் தோற்றத்தி னின்றும் விடுபட்டு, நித்திய நிர்விகார ஸ்வரூபமான ஈஸ்வரனது திருவடியைச் சரணடைந்து இத்தோற்றவுலகத்தையும், நிலையற்ற பொருளற்ற காட்சிகளையும் விட்டுத் தாண்டிச்செல்ல அவாவுகின்றான்.

காட்டிலே தோன்றி மறையும் கானல் நீர்போன்ற இவ்வுலகத்தினிடம் உண்டா யிருக்கும் அமைதியின்மையும் அதிருப்தியும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வாழ்நாட்களில் ஏதாவதொரு காலத்திலுண்டாகும். இத்தகைய தன்மையானது ஒருவனுக்கு அவனது வாழ்நாளில் அவனது அன்புடையில்லாள், துன்பமும் துக்கமும் மல்கிய இவ்வுலகில் அவனைத் தனியாக

விட்டுவிட்டுத் தான் இவ்வுலகவாழ்க்கையைநீத்த காலத்திலும், மற்றொருவனுக்குப் புத்திர வாஞ்சையாகிய அன்புத்தளையால் பிணிப்புண்ட தன் மகனோ அல்லது மகளோ அவனது புத்திமதி, கண்டனை, தண்டனை முதலியவற்றைச் சட்டைசெய்யாது பழிமிகுத் தழிவுறும் வாழ்க்கையையும் குணத்தையும் கொண்டு அவனது நல்ல பேருக்கு அபகீர்த்தியைக் கொணர்ந்த காலத்திலும், மற்றும் ஒருவனுக்குத் தொழில் சிதைவுற்ற காலத்திலும், அல்லது நெற்றி வியர்வை நிலத்தில் விழ ஈட்டிய பொருளானது துரதிஷ்ட வசத்தினுற் குறைந்து வறுமை வாய்ப்பட்ட காலத்திலும், இன்னும் வேறொருவனுக்கு இல்வாழ்க்கையின் இன்பங்களை யனுபவித்துப் போதிய திரவியம்திரட்டிச் சிறந்தபதவியை யடைந்த பிறகும், துரதிருஷ்டத்தின் பயனாக அவனால் விரும்பப்படும் பொருள்கள் கிட்டாமற்போன காலத்திலு முண்டாகிறது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஒருவன் தான்விரும்பும் பொருள்களை யடைய முடியாமைக்கும், தான் விரும்பும் பொருள்களைக் காப்பாற்ற இயலாமைக்கும், தான் எப்படியிருக்க வேண்டுமென்று விரும்புகிறானோ அவ்வாறிருக்கச் சக்தி யற்றிருப்பதற்கும், கவலைப்படுவதுடன், தோன்றிமறையும் பொருள்களிடமும் உலகத்தினிடமும் வெறுப்புற்று, இவற்றால் அடைய விரும்பும் சுகத்தின் பயனற்ற தன்மையையும் நன்கறிந்து கொள்கிறான். அப்பொழுது மறைவும் தோற்றமும் வாய்ந்த திரையைக் கிழித்துப் புகுந்து அந்தமில் இன்பத்திற் கிருப்பிடத்தினை அடையவும் மானிட ஹிருதயத்து அந்தமில் திருப்தியும் அமைதி

யும் அடையவல்ல பரம்பொருளைத் தேடிக் காணவும் ஓர் ஆசை பிறக்கின்றது.

இவ்வாசையானது அவனைக் கடவுள் நெறியிற்செலுத்தத் தூண்டினும் இப்பிரபஞ்சத்தின் ஆகர்ஷண சக்தியானது அவனை மற்றொரு வழியி லிழுக்கின்றது. அவன் இவ்வுலகத்தை வெகுகாலமாகப் போற்றிப் புனைந்து வந்ததினால், அது அவனைத் தன் வரம்பினின்றும் தப்பிப்போக எளிதில் விடுவதில்லை. இவ்வுலகை மறக்கவேண்டுமென்று அவன் பிரயத்தனப்படும்போதெல்லாம் இவ்வுலகமானது அவன்மனதை மறுபடியும் ஆயிரக்கணக்கான வகைகளாற் றன்னிடம் இழுத்துக் கொள்ளத் தொடங்கும். பன்முறையும் மனோ விகாரத்தின் வாய்ப்படாம லிருக்கும் பொருட்டு உறுதி கொள்கிறான். கடைசியில் கசப்பையு முண்டுபண்ணும் புற்புத வாழ்க்கையை உடைய பேயான காமாந்தகார ஆபாசங்களிற் பற்றற்றிருக்கும் படியாகப் பன்முறையும் புனிதமான சிரத்தையுடன் கூடிய உறுதியைச் செய்து கொள்கிறான். ஆனால், அவன் தீர்மானங்கள், சபதங்கள் எல்லாம் வியர்த்தமாகின்றன. எவ்வாறு ஓர் குடியன் குடியின்மீதுள்ள போதையா லிழுக்கப்படுகிறானோ, அவ்வாறே உலகினிடமும், அதன் மாயா வஸ்துக்களிடமும், அவைகளால் மனக்குழப்பமும் வருத்தமும் உண்டாவதா யிருப்பினும், அவன் இழுக்கப்படுகிறான்.

இவ்வுலகத்தை நீத்துக் கடவுளின் பாதாரவிந்தத்தைப் பற்றவேண்டுமென்று அவன் இச்சைப்படினும், பயனற்ற மாயையை நீக்கி, எதனிடம் சென்றால் திரும்

புதலில்லையோ அப்படிப்பட்ட நித்தியப் பொருளை யடைந்து ஆனந்தப்பட விரும்பினும், இவ்வுலகத்தின் மாயா சக்தியினின்றும் நீங்கும் முறையை அவனுக்குப் போதிக்கக் கூடியவர் யார்? இன்பம் பயப்பதுபோற் றோன்றித் துன்பத்தையே நல்குமிவ்வுலகத்தின் வீண் இன்பங்களை வெறுத்துத் தள்ளி நித்தியானந்தமான இடத்தை யடையும் உபாயத்தைப் பற்றிய அறிவை அவனுக்கு யார் தந்துதவுவார்? ஆ! இவ்வுலகம் நம்மை அதிகமாகக் கவர்ந்துகொண்டு விட்டது; நல்லுணர்வும் தெய்வ பக்தியும் வாய்ந்த ஒவ்வொரு மனிதனும் இதைப்பற்றி அடிக்கடி வருத்தப் படுகிறான்.

கடவுள் சொல்லொணுச் சக்தியையுடைய மாயை யென்பதைக்கொண்டு இவ்வுலகைப் படைத்திருக்கிறார். வானிலொளிரும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரக் கூட்டங்கள், நாம்வசிக்கும் பூமி, உயிருள்ள ஒவ்வொரு வஸ்துவின் சரீரம், மனது, மனிதனது எண்ணங்கள், உணர்ச்சிகள், மனிதனுக் குண்டாகும் திருப்தி, அதிருப்தி இவையாவும் கடவுளது மாயையென்று சொல்லப்படும் விசித்திர சக்தியினு லானவைகளே.

கடவுளது மாயையானது மனிதரது மனதை யுண்டுபண்ணிய பிறகு, அதில் தனது தொழிலை இரு விதத்தினுந் காண்பிக்கின்றது. தனது தொழிலை வித்தை, அவித்தை, அறிவு, பேதைமை, தர்மத்திலாசைப்படுதல், அதர்மத்திலாசைப் படுதல் என்னும் வழிகளைக் காட்டுகின்றது. வித்தை மனித இயல்பை ஆளுமிடத்துப் பூர்ண சத்வ குணம் மலிந்து பரிணமிக்கும் வரை, தினந்தினமும் சீரிய மார்க்கத்தில் வளரு

கிறது. பிறகு மனிதன் தெய்வத்தன்மை யடை கிறான். கடவுளுடன் ஐக்யமாகிறான். அதன் பிறகு புத்தியில்லாச் செயல்களும், அதன் பயனாக உண்டா கிய சிற்றின்பத்தால் சேர்ந்த துக்கங்களும் அவனை அணுகா. அவித்தையானது மனிதனது இயற்கையை ஆதிக்கம் கொள்ளுமாகில் அது நாளுக்கு நாள் பழுது படுகின்றது. பிறகு மனிதன் சிற்றின்பத்தை நாடிய வனாகில், கடவுளிடமிருந்து மேலும் மேலும் தூர விலகி இறுதியாக மிருக நிலையை யடைகிறான்.

பின்னே சொல்லப்பட்ட மாயையின் இரண்டா வது சக்தியானது அநேக மாந்தர்களைத் தன் ஆட்சி யின் கீழ் வைத்திருக்கிறது. அவித்தையானது எப் பொழுதும் மனிதர்களைப் பிழையுறச் செய்கிறது; நினைக்கக்கூடாததை நினைக்கும்படிச் செய்கிறது; விரும் பக்கூடாததை விரும்பும்படிச் செய்கிறது; அடி எடுத்து வைக்கவொண்ணு நெறிகளில் நடக்கச் செய்கிறது. அவி த்தையானது அவர்களது மனப்பார்வையைத் திரித்து, அழியும் தன்மையுள்ள உலகில் அழியா வின்பத்தை யும், தன்னலங்கருதும் பற்றுடைய மாந்தர்கள்பால் அன்பையும், இவ்வுலக விவகாரங்களினின்று அமைதி யையும் நாடும்படிச் செய்கின்றது. அவித்தை தான் மக்களைத் தங்களது கடமையைச் செய்ய வொட்டா மல் வெருட்டிப் பூரண வாழ்க்கையைப் பெறும்பொருட் டுச்செய்யும் முயற்சிகளெல்லாம் பயனற்றவையென் றும், கடவுளை யறியப் பாடுபடுவதில் தன்னழிவே யுண்டாகுமென்ற ஒரு பயங்கரமான தோற்றத்தைக் காட்டியும் ஜால வித்தை செய்கிறது. கள்ளிருளில் நடு

வழியிற் கிடக்கும் கயிறு பாம்பென்ற தப்பான எண்ணத்தை யெழுப்பி பயமுறுத்துதல் போன்றும், அல்லது அற்ப விலை மதிப்புள்ளவோர் ஒளிவீசும்பொருள் பொன் அல்லது வைரம்போல் தோன்றுவது போலவும் அவித்தையா லுண்டாகிய அஞ்ஞான இருளில் நல்லவை கெடுதலானவையாயும், தீயவை நல்லவையாயும் தோன்றுகின்றன. அவித்தையின் மாயையிற் சிக்குண்டவராய் எவைகளிடமிருந்து நாம் முற்றும் விலகியிருக்க வேண்டுமோ அச்செயல்களிடமும் பொருள்களிடமும் இழுக்கப்படுகிறோம். ஐயோ! மனிதன் அவித்தையின் மாயையிற் சிக்காமலிருப்பானாயின் அவனது இயற்கையில் பாபம் என்பது புகுந்தேயிராது. நியாயமானது மனிதன் இயற்கையினின்றும் தகர்க்கப் பட்டிராது. மனிதனியல்பானது பூரணமும் ரம்மியமும் பொருந்தியதா யிருக்குமேயன்றி இப்பொழுதிருப்பது போலத் துன்பமும் துக்கமும் நிறைந்ததாயிராது.

அப்படியாயின், அவித்தையின் பிடியினின்றும் தப்பித்துக் கொள்வதற்கு மனிதனுக்கு வழியில்லையா? எப்பொழுதும் ஒழுங்கற்ற முறையிலேயே செலுத்தும் இம்மாயையின் செயலைத் தோற்கடிக்கச் செய்ய வழியாது மில்லையா? இதன் மாயா சக்தியினின்றும் மனிதன் தப்பித்துக்கொள்ளச் சூழ்ச்சி ஒன்றுமில்லையா? சர்ப்பங்களைக் கட்டுவதற்கு மந்திரங்கள் உளவே! தாவர வகைகளிலும் உலோக வகைகளிலும் கலந்திருக்கும் விஷயங்களை மாற்றுதற்கு மாற்றுக்களிருக்கின்றனவே! மனிதனது பூதவுடம்பி லுண்டாகும் குறைகளையும் பிணிகளையும் போக்குவதற்குப் பரிஹாரமிருக்

கின்றதே ! ஆனால், மனிதனது மனதில் அவித்தையி னாலேற்படும் சேஷ்டைகளை ஒழிப்பதற்கு உபாய மில்லையா ? அப்படி மார்க்கமிருக்குமாகில் அதைவெளிப்படுத்தி அதை அனுஷ்டிக்கும் முறையையும் போதிப்பவர் யார் ?

எவ்வாறு வித்தை யென்பது கடவுளின் அருட்பெருஞ் சக்தியின் ஓர் அம்சமோ, அதுபோலவே அவித்தையும் கடவுளின் ஒரு தன்மையாகும். சாஸ்திரம், அசாஸ்திரம், அறிவு, அறிவீனம் இவையாவும் கடவுளிடமிருந்து உற்பத்தியாகின்றன. எவ்வாறு கடவுளது சக்தியே நமது மயக்கத்திற்குக் காரணமா யிருக்கின்றதோ, அதேபோன்று கடவுளது சக்தியே நம்மை மயக்கத்தினின்றும் விடுவிக்கக் காரணமா யிருக்கின்றது. அவித்தையானது கடவுளிடமிருந்து தோன்றுகின்றபடியால் அதன் கொடுமையினின்றும் கடவுள் தான் நம்மைக் காப்பாற்ற முடியும்.

கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்வதாவது:-

𑌦𑍈𑌵𑍀𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 ।
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥

"ஈஸ்வராம்சமான எனது மாயை முக்குணவசப்படுதலான் கடக்க அரிதாகின்றது. என்னைச் சரணடைந்தோர்தான் அதனைக் கடந்து அப்பால்செல்ல இயலும்"

இவ்விஷயத்தைப் பற்றிப் பகவானது வார்த்தைகள் மிகவும் தெளிவா யிருக்கின்றன. அவரை நாம் சரண்புகுவோமாயின், அவர்தான் நம்மை அவித்தையி

னின்றும் தப்புவிப்பார். தனது ஜாலங்களால் காண் போரது மனதில் அனேக தப்பு அபிப்பிராயங்களை ஏற்படுத்தி அவர்களை மயக்கும் ஒரு பெரிய மந்திர வாதி, தனக்கிஷ்டமான யாதானுமொருவனை தன் வல் லமையான் அக்கட்டினின்றும் விடுவிக்க, அங்ஙனம் விடுபட்டவன் பொருள்களைச் சரியாய் உணர்ந்துஅவை சம்பந்தமாய்ச் சரியான விஷயங்களை எவ்வாறு அறி கின்றானோ அதேபோன்று, தன் மாயாசக்தியை ஆட்டி வைத்து அதன் ஒரு பகுதியாகிய அவித்தையைஅதன் தொழிலை உலகத்திற் செய்யும்படி அமைத்திருக்கும் கடவுளும் அதனின்றும் தப்புவிப்பதற்கும் அறிந்துள் ளார். கடவுள்தான் அவித்தையாகிற வியாதியை உண்டு பண்ணி யிருக்கிறார். அதன் நிவர்த்திக்கும் உளவும் செய்துளர்.

அவித்தையின் சக்தியைப் பயனற்றதாகச் செய் யும் முறையைக் கடவுள் பண்டைக்காலத்தில் மஹாத் மாக்களுக்குப் போதித்திருந்தார். அஞ்ஞானத்தினின் றும் அதனாலுண்டாகும் அவஸ்தைகளினின்றும் ஆண் டவனருளால் தம்மை விடுவித்துக் கொண்ட முதன் மக்கள் இவர்களே. தோற்றமாகிற பொய்த்திரையினைக் கிழித்தெறிந்து சத்தான வஸ்துவைக் கண்டவர்களில் அவர்களே முதலானவர்கள். அவித்தையின் ஆதிக்கத் தினின்றும் தாண்டியவர்களாய் எல்லாப்பொருள்களும் கடவுளிடத்தனவாயும் கடவுள் மயமாயும் இருக்கும் உண்மையைக் கண்டார்கள். தங்களுக்குக்கூட சுய வாழ்க்கையில்லை யென்பதையும் தாங்கள் கடவுளின் சாயைகள் என்பதையும், கடவுளிற்றான் தாங்கள்

இயைந்து கொண்டும், வாழ்ந்துகொண்டும் வருவதைக் கண்டார்கள். என்றும் தீயநெறியி லுய்க்கும்சக்தியை யுடைய அவித்தையினு லுண்டாகும் அஞ்ஞானத்தை யும் குழப்பத்தையும் நீக்கி இவ்விதமாக உண்மையை யறிந்தபொழுது வாழ்க்கையின் துன்பங்களி னின்றும் விடுபட்டவர்க ளானுர்கள். அதன் பிறகு வஸ்துக்களி டம் ராகம் (ஆசை) த்வேஷம் (வெறுப்பு) நீக்கினுர் கள். ஆகவே அதிருப்தியும், அமைதியின்மையும் அவர் களது உள்ளங்களைத் துன்பப்படுத்த வில்லை. அதுமு தல் உன்னத ஞானத்தைப் பெற்றவர்களாய், மாரு ஆனந்தத்தை யடைந்து செந்நெறியைப் பூண்டொழுக லானுர்கள். மேலும் அவர்கள், மானிடர்களிடம் எல்லை யற்ற அன்புள்ளவர்களாகித் தாங்கள் எந்த உபாயத் தின் மூலமாகச் செம்மையை அடைந்தார்களோ அவ் வுபாயத்தை, அதைப் பெறுவதற்குத் தகுதியும், அவாவும் உடையோர்களுக்கு உபதேசித்தனர். அதே போன்று அவர்களும் தங்களது ஞானத்தை மற்றவர் களுக்கும் உபதேசித்தனர்.

இவ்விதமாக மஹாத்மாக்களின் பரம்பரை வாயி லாக அவ்வுயர்ந்த ஞானமானது நம்வரைக்கும் வந் திருக்கிறது. பனிமால் வரையாகிய ஹிமாலயத்தின் உயர்ந்த சிகரத்தினின்றும் புனிதமான கங்கையானது உற்பத்தியாகிச் சிறுசிறு மலைகளினூடே சென்று கடைசியாக மனிதருக்கு நன்மையைச்செய்யும்பொருட் டுச் சாதாரண சம பூமிகளுக்கு வந்துதவுவது போன்று அவித்தையைக் கடக்கவும் அதினின்றெழும் மாயை யைத் தாண்டிச் செல்லவும் வல்ல உபாயமாகிற நிரந்

தர ஞானமானது, கடவுளிடமிருந்து குரு பரம்பரை யாய் நம்மிடம் வந்துளது.

நாம் ஞானத்தை எந்த ஆசாரியரிடமிருந்து பெற்றாலும் அது கடவுளது கருணாமிர்தமே. நம்மனதிற் குடிகொண்டிருக்கும் அஞ்ஞான விருளை அகற்றும் ஓர் ஆசாரியனது வன்மையானது கடவுளிடமிருந்து அவனடைந்த வைப்புப் பொருளாகும் (Trust) எந்தத் தெய்வீக சக்தியானது நம்மை அஞ்ஞானம் போன்ற தீய வலைகளினின்றும் விடுவித்துக் கடவுளுடன் ஐக்கியப்படுத்துகின்றதோ, அந்தத் தெய்வீக சக்தியைப் பிரத்தியட்சப்படுத்தும் இடைப் பொருளாக விருக்கும் காரணத்தாற்றான், குருவைப் பெருமைப்படுத்தி வந்தனை செய்கின்றோமேயன்றி வேறு காரணத்தா வில்லை. நமது மனத்தினிடையிருக்கும் அஞ்ஞானத்தையும் பயத்தையும் ஓட்டி, நமது வாழ்நாட்களில் நாமாற்ற வேண்டிய கடமைகளையும், அக்கடமைகளைச் செய்வதால் நாமடையும் பயன்களையும் தெற்றெறன விளக்கும் அவ்வூக்க மொழிகள் ஒளிவீசும் கதிர்கள்போலத் தோன்றி விளங்குவதனால் குருவானவர் மல்கி விளங்கும் ஜோதிப் பிரகாச வள்ளலாகும். ஆசானது உபதேச மொழிகள் நாம் நமது வாழ்க்கைப் பயனை அடையும் பொருட்டு, முன்னே செல்லத் துரிதப்படுத்தி, நமது முயற்சிகளில் அயற்சி நேரிடா வண்ணம் நம்பிக்கையையும் தைரியத்தையும் அளிக்கின்றன. ஆசானது உபதேச மொழிகள் அபார சலன சக்தியும் உயிர்த் திறனும் பொருந்தியனவாயுள. ஏனெனில், அம்மொழிகளின் சாரமும், அவைகளுக்காதாரமான அறிவும்,

நித்திய வஸ்துவான ஈசுவரனின்று எழுவனவாம். நமது ஞானசாரியாரிட மிருந்து உபதேசங்களைப் பெறுங்காலத்தில் நமது ஹிருதயத்தில் கடவுளறிவே ஒளிர்கின்றது. எல்லையற்ற ஒளிக்களஞ்சியத்தினிட மிருந்து ஒளியைப் பெற்றுப் பின்பு அதை வெளியிடும் ஜோதிப் பொருள்கள் போன்று எல்லா ஞானசாரியர் களும் அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாயிருக்கும் எம்பெருமானிடமிருந்து பெற்ற ஞானத்தை நமக்குப் புகட்டுகின்றார்கள். ஆகையால், நாம் ஒரு குருவை வணங்குங்கால், எந்தத் தெய்வீக சக்தியானது நமது அஞ்ஞானத்தை யோட்டி ஆண்டவனருகிற் சேர்க்கின் றதோ அவரிற்றோன்றும் அத் தெய்வீக சக்தியையே நாம் வணங்குவதாகும்.

நமது ஞான நலத்தின் பொருட்டு நமது ஆசா னிடமிருக்கும் தெய்வீக சக்தியை நாம் இவ்விதம் உணர்வது அவசியமாகும். ஏனெனில், நமது மனமா னது அவ்வித அங்கீகாரத்தினல் ஆண்டவனது சமீ பத்தை யறிந்து ஞானத்தில் முதிர்ச்சி யடைவதற் குரிய குணங்களை வளரச்செய்யும்.

ஞான முதிர்ச்சியை யடைந்த ஒரு மனமே சத் துப் பொருளை அறியும். சத்தைப்பற்றிய ஞானத் தைச் சாசுவதப் பொருளாக வைத்திருக்கலாம். சிலர் சில சமயங்களில் கடவுளது இயல்பையும், சில சமயங் களில் தங்களுக்கும், உலகத்திற்கும், கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அறிகின்றார்கள். ஆயினும் அவர்களது அறிதலானது ஸ்திரமான நம்பிக்கையுட னிருப்பதில்லை. அந்த அறிவானது அவர்களது மன

தில் அவியும் சுடர் போன்று சிறிது காலம் நிலையில் நில்லாத ஒளியுடன் பிரகாசித்துப் பின்பு நின்றுவிடு கின்றது. எவரெவர்கள் பரிபாக மடைந்து விட்டார் களோ அவர்கள் தான் சத்தை (உண்மையை)ப்பற் றிய ஆழ்ந்த பதிந்த நம்பிக்கையையும், கடவுளது சாசு வதமான இயல்பையும், நாம் அவர் உள்ளும் அவர் ஊடும் வாழ்கிறோம் என்ற விஷயத்தையும் அறிவார் கள்.

அத்தகைய மனப் பரிபாகத்தை எவ்வாறடை வது? நம் மனம் பரிபாக மின்மைக்கும் அதனிடம் தோன்றும் குற்றங்குறைகளுக்கும் காரணம் என்ன வென்று ஆராய்ந்தால் ஒன்றுளதென்று புலனாகும். அது அழிக்கப்பட்டால், மனமானது வேறு விதமாக மாற்றப்பட்டுப் புதிய வாழ்க்கையை யடைவது நிச்ச யம். அகங்காரம் அல்லது மமதை யென்று சொல் லக் கூடிய தன்மையைத் தன்னிடம் வைத்திருப்ப தால் நம் மனமானது பல தீமைகளுக்கும் இடனளிக் கின்றது. நாம் ஸ்வதந்திரமுடையோ மென்றும், கட வுளினின்று வேறுபட்டவர்கள் என்றும், அதனால் நமது இச்சைகளை யடைந்து எல்லா வஸ்துக்களையும் மனிதர்களையும் நமதின்பத்திற்குரிய கருவிகளாக மாற் றிக் கொள்ளலாமென்றும் எண்ணுவது தவறாகும். இத் தப்பெண்ணமானது, வீணான சுய நம்பிக்கையை யும், அகங்காரத்தையும், மனிதர்களிடம் விருப்பையும் வெறுப்பையும் உண்டுபண்ணிக் கடவுளுக்கும் ஏனை யோருக்கும் நமக்கு முள்ள சம்பந்தத்தையும் மறக் கடிக்கச் செய்கின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து,

அது நம் வாழ்வின் உயரிய நோக்கத்தையே மறக்கச் செய்து விடுகின்றது. உன் சுபாவத்திற் சேர்ந்திருக்கும் அகங்காரத்தை யழி. அப்படிச் செய்யின் உன்னை உண்மை ஞானத்தினின்றும் கடவுள் சாந்நித்தியத்தினின்றும் தடுக்கும் தடையைத் தகர்த்தவனுவாய். மனிதன் அகங்காரத்தை மெலிவித்துக்கொண்டு செல்லச் செல்ல அவனது நற்குணங்கள் மலர ஆரம்பிக்கின்றன. இறுதியாக அவனது மனமானது அகங்காரத்தினின்றும் முற்றிலும் விடுபட்டு, பரிசுத்தமானதாகவும், பூரணமானதாகவும், சிங்காரமான பூங்காவனம் போன்றும் வளர்ந்து கடவுள் வாசஞ் செய்வதற்குரிய *கோவிலாகிறது.

அகங்காரமானது நம்மிடம் மிகவும் ஆழமாக வேரூன்றி விடுவதால் அதை யழிப்பதென்பது கடினமாகிறது. அது அழிந்து போனுற்போல் தோன்றி உடனே மறுபடியும் உற்பத்தியாகிறது. நாம் அதை அழித்துவிட்டோமென்று நினைக்கும் போதே அது எதிர் பாராமல் கிளம்புகின்றது. ஒரு மனிதன் தன் பரிசுத்த வாழ்வு கெடாமலிருக்கும் பொருட்டு அகங்காரத்தை வளரவிடக் கூடாது என்று உறுதி செய்து கொள்கிறுன். ஆடம்பரமாக ஆடைகளை அணிவதைவிட்டுவிடுகிறுன். கடினமாகப்பேசுவதை நிவர்த்திசெய்துகொள்கிறுன். அருவருக்கத் தக்க குணங்களை நீக்கிக் கொள்கிறுன். ஆடம்பரமற்ற ஆடையுடன் இனிய சொற்கள் கொண்டு மிகவும் சாந்தமான முறையில் நடந்துகொள்

* (கோ - தலைவனது ; இல் - உறைவிடம்.)

கிறான். தான் அகங்காரத்தை யழித்து ஜயித்து விட்ட தாகவும் அதனால், பிறகு கொஞ்சமும் தொந்தரவு நேரிடாதென்றும் நினைக்கிறான். ஆனால், அந்தோ! சுட்ட றுத்த நீற்றினின்று பக்தி கர்வத்தைக்கொண்டு அவன் மனதில் அது எழுகின்றது. அவன் தனது சரீரத்தை யும் மனதையும் அடக்கிவிட்டதாகவும், கடவுளது கிருபைக்குப் பாத்திரனாகிவிட்டதாகவும், அகங்காரம், தற்சிறப்பு முதலியவற்றின லைலக்கப் படுகின்றவர்கள் போன்று தான் அவ்வளவு கெடுதலுள்ளவன் அல்ல வென்றும் நினைத்துக்கொள்கின்றான். தான் ஏனையோரி னும் வேறானவ னென்றோ அல்லது உயர்ந்தவ னென் றோ எண்ணும் எண்ணம் இவனுள்ளத்தில் எழுந்தவுட னேயே பழைய துர்க்குணமானது உயிர்பெற்று மனத் திடை உத்தாரணமாகிறது.

தான் இறந்து, தனது இரத்தம் பூமியிற் சிந்திய வுடன் தன்னைப் போன்று எண்ணிறந்தவர்களாக இரத்தத்தின் ஒவ்வொரு துளியினின்றும் உண்டான இரத்த விஜயனென்ற அரக்கனைப் போன்று அகங் காரமும் புலப்படுகின்றது. அகங்காரத்தை யழித்து அதனது ஆதிக்கத்தினின்றும் விடுபடுதல் மிகவும் கடினமானதாகும்.

அகங்காரமானது, கர்வம், வீண்செருக்கு இவை களாகத் தோன்றுவதுடனில்லாது வேறுவிதமாகவும் உருக்கொள்கின்றது. பலவிதமான தற்செருக்குகளும் இதனிடமிருந்து உண்டானவைகளே. இவ்வுலக வாழ்க் கையில் தங்களுக்குப் போதிய இன்பத்தையும் கௌர வத்தையும் அடையும் பொருட்டு மனிதர்களுக்குள்ளி

ருக்கும் போராட்டத்தில் மனிதர்கள் தற்பெருமை யினலேயே தூண்டப்படுகின்றார்கள். அவர்களது மனதிலுண்டாகும் எல்லா அபிப்பிராயங்களுக்கும் அடிப்படையாயிருக்கும் வார்த்தைகள் 'யான்,' 'எனது' என்பவையாகும். அகங்காரத்தினல் தூண்டப்பட்ட வர்களாய் தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தாருக்கும் நன்மையைத் தேடிக் கொள்ளும் பொருட்டுச் சற்றே னும் சிந்தியாது அன்னியர்களது உரிமையின் மீது எவ்வளவு முறை மனிதர் பிரவேசிக்கின்றார்கள்? அநீதி, ஹிம்சை, பொய் இன்னுமிவை போன்ற தீய குணங்களும் அகங்காரம் மலிந்த சுயநலம் கருதும் மனிதர்கள் யாண்டும் இடும் போரினின்று எழுந்தவை களே. கடவுளைப்பற்றி உண்மையறிவைப் பெறுவதி னின்று நம்மை நீக்கி வைத்திருப்பதும், மனிதவர்க் கத்தாரின் ஏகத்தன்மையை அறியச் செய்யாமலிருப் பதும், சமுதாயத்திலுண்டாகும் தீமைகளுக்குக் காரணமான சுயநலப் போரும், இவை எல்லாம் இந்த அகங்காரமென்று சொல்லும் மனிதர்களது தவறுன மனப்பான்மையா லுண்டானவையாகும். இத்தகைய தீமை மனிதனியற்கையி லில்லாதிருக்குமேயாயின் ஒவ் வொரு மனிதனது மனதிலும் அன்பு கொழுமி மனி தர்களுக்குள்ளிருக்கவேண்டிய எல்லாவித சம்பந்தமும் இனிதாக விருக்கும். சண்டைகளுக்கும் போட்டி களுக்கும் பதிலாகக் கூட்டுறவும் மனமொத்த செய் கைகளும் மனிதர்களுக்குள் நிரம்பி யிருக்கும். இத் தன்மைக்கன்றி ஆன்ம முதிர்ச்சிக்காகப் பாடுபடாமல், இவ்வுலகவின்பத்திற்காகவும், கௌரவத்திற்காகவும்

உன்மத்தப் போராடுவதில் மனிதர்கள் தங்களது சக்தியை எல்லாம் வீண் செலவு செய்யாதிருந்திருப்பதுடன் உயரிய தொழிலினின்றும் பயனினின்றும் கீழ் வீழ்ந்திருக்கமாட்டார்கள்.

அகங்காரமானது நமது ஆன்ம முதிர்ச்சிக்குத் தடையாயிருப்பதாலும், நமக்கும் கடவுளுக்கும் ஏனையோருக்கு முள்ள உறவு முறையைத் தடுப்பதினாலும், நம் சமுதாய வாழ்விற்கு அநேக தீமைக்கு இடனளிப்பதாலும் எம்முறையினாலும் நமது இயற்கையினின்றும் இத்தீமையின் மூலத்தை ஓட்டுவது நமது முதற் கடமையாகும். இத்தீமையை வீண் வாதத்தினாலும், நாற்காலியிற் சாய்ந்துகொண்டு அதன் தீய தன்மையைப்பற்றி விவாதிப்பதாலும் அதை ஓட்டிவிட முடியுமா? லோக மாந்தர்களைப் போல் காலத்தைப் போக்கிக்கொண்டு, வாயினால் மாத்திரம் கடவுள் ஒருவரே நித்தியர், மற்றவை யாவும் அநித்தியம்; கடவுள் ஒருவரே சர்வ வல்லமையுள்ளவர், நான் அசக்தன்; சூனியம் ஒன்றுமில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தால், அடக்கத்தையும், அகங்கார நிவர்த்தியையும், கடவுளிடம் நிரம்பிய அன்பையும், பக்தியையும் அடைந்துவிடமுடியுமா? அகங்காரத்தினால் மனதிற் கட்டப்பட்ட கோட்டையை வெறும் சொற்களால் தகர்த்தெறிய முடியவே முடியாது. இடைவிடாமுயற்சியாலும், தினமும் தான்எனும் தன்மையை மறந்த கடினமான பாதையில் நடப்பதாலும், தீயவற்றிற்கெல்லாம் அடிப்படையான இத்தீமையை நம்மியற்கையினின்றும் வேருடன் களையலாம். ஞான மார்க்

கத்திற் செல்ல விரும்பும் ஒவ்வொரு மனிதனும் அகப் பகைகளையும், இவனைக் கடவுளிடமிருந்து நீக்கியிருக் கும் பொய்யான சுய அறிவுடனும் சமர் புரியவேண் டிய அளவு புறப்பகைவர்களோடு அமர் செய்யவேண் டியதில்லை. அகங்காரம் அடியுடன் அழிந்து கடவுளறி வும் கடவுளே இவனின் எல்லாமாயிருக்கிறார் என்ற அறிவும் அவனிடம் ஓங்கித் தழைக்கும் வரையிலும் மேற்சொன்ன எதிரியுடன் அவன் எதிர்த்துப்போராட வேண்டியதே.

நம்மிடம் அகங்காரம் குடிகொண்டிருப்பதால், கடவுள் அந்தர்யாமியாய் ஒவ்வொருவரிடமும் தோன்றி யிருக்கிறார் என்பதையும், எல்லாருக்கு முன்னும் அட ங்கி நடக்கவேண்டுமென்பதையும் காண்கின்றோமில்லை. தற்புகழ்ச்சியிலேயே நாம் மிகவும் பழக்கப் பட்டிருப்ப தால், நம்மைப் பற்றி அன்னியர் முன்னிலையில் தாழ்த் திப் பேசிக் கொள்வதற்கும் அதற்குத் தகுந்தாற் போன்று நமது ஒழுக்கத்தைச் சீர்திருத்தம் செய்து கொள்வதற்கும் கடினமாயிருக்கின்றது. ஆயினும் அது செய்தே தீரவேண்டும். நாம் சென்ற தீநெறி யினின்றும் பின் சென்றாலல்லது நமது முடிவிடத் திற்கு வந்து சேருவதற்கு வேறு வழி என்ன விருக் கிறது? முதன் முதலில் அகங்காரத்தைச் சிறிது சிறி தாகக் குறைத்தும் பின்பு விநயம் என்ற வாளால் அதை அடியுடனழித்தும் நம்மைச் சீர்திருத்தம் செய்து கொள்ளவேண்டியது. அடக்கம் என்பதை யாவர் முன் பும் பயிற்சி செய்யாவிடினும் நம்மைவிட உயர்ந்தோர் என்று நன்றாக நமக்குத் தெரிந்தவர்களிடமாவது

பயிற்சி செய்யவேண்டும். அவர்கள் முன்பு தற்பெருமையை யழித்து விடுவோமாயின் நமது அகங்காரம் அழிவதற்கு வழியேற்படும்.

எந்த ஞானசாரியன் மூலமாக நம்மனதில் விலையிலாக் கடவுளறிவாகிய ஞானமிர்தம் வார்க்கப்படுமோ அத்தகைய குருவின் முன்பு மனதை யடக்கி, மமதையை ஒட்டி ஞானத்துறையில் பயிற்சி செய்ய ஆரம்பிப்பதைவிடச் சிறந்த ஆரம்பம் வேறொன்றுளதா? அவர் மூலமாகத்தான் உண்மை யறிவு நம்மிடம் ஒளிரும். கடவுளின் சர்வ வல்லபத்துவம் அவர் மூலமாக வெளிப்பட்டு, அவரது சர்வசக்தி நம் வழியிலுள்ள துன்பங்களை யெல்லாம் போக்கி, நம்மைத் தீயவைகளினின்றும் நல்லவைகளிடம் சேர்க்கின்றது. அவரால்தான் நாம் உயரிய வாழ்க்கையின் பெருமையைப் புணர்ந்து கொள்கிறோம். நமது அஞ்ஞானத்தினால் கடவுளைத் தூரத்தில் அமைந்துள்ளவரென்றும் அவரை யடையமுடியாதென்றும் எண்ணினும், குருவினுதவியால்தான் கடவுளைச் சர்வாந்தர்யாமியாயும் எக்காலத்திலும் விளங்கிக் கொண்டிருக்கும் நம் அகத்துறை பொருளாம் ஆத்மாவாகவும் அறிகிறோம். ஞானசாரியர் எப்பொழுதும் கடவுளினின்றும் சற்றும்இயம்பவொண்ணா ஐக்கியத்துடனிருப்பதால் தன்னிலைக்கு நம்மையும் தனது எல்லையற்ற கருணையினால் உயர்த்திக்கடவுள் ஐக்கியத்தாலுண்டாகும் நன்மையையும் அடையும்படிச் செய்கிறார். இவ்விதமாகக் குருவின் மூலமாக இயங்கும் சக்தி மானிட சக்தி யன்று. தெய்வீகம் வாய்ந்தது. 'அகம்' என்பதே அவரிடமிருந்து அழிந்து

விட்டபடியால் தெற்றிய ஒளிவீசும் பளிங்குக்கல் போலப் பிரகாசிக்கின்றூர். அவருதவியால் நமது அஞ்ஞானம் போய்க் கடவுளின் புகழும், சர்வ வல்லபத்துவமும் பிரகாசிக்கின்றன.

ஆகையால் அகங்காரம் அழிதல் முறையைத் தெரிந்துகொண்டு, அதில் பூரணமாய் வளருவதற்கும், அஞ்ஞானத்தில் நிரம்பியிருக்கும் நம்மனது கடவுளறிவுகொண்டு மிளிரும் பொருட்டும், கடவுள் எப்பொழுதும் நம் சமீபத்தி லிருக்கின்றூர் என்ற உணர்ச்சி பெற்று அவரது புகழவொண்ணு ஆசியைப் பெறுதற்கும், நமது ஞானசாரியர் முன்பு பூர்ண வினயத்துடன் வணங்கி வழிபடுவோமாக. கடவுள் அவர் மூலமாகப் பேசுகிறூர். அவர்மூலமாகத் தமது இணையற்றஆசிகளை நம்மீது பொழிகிறூர். அவரது கைகளைக் கொண்டு நம்மை நல்வழியிற் செலுத்துகிறூர். ஆகையால், நாம் அவரிடம் கடவுளிருப்பதை யறிந்து நமது பக்தியை அவரது பாதங்களிற் சமர்ப்பித்து, பிராசனோபநிஷத்தில் சொல்லி யிருப்பது போன்று,

𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌨𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌕𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌪𑌰𑌂

𑌪𑌾𑌰𑌂 𑌤𑌾𑌰𑌯𑌸𑌿।

"அஞ்ஞானக் கடலினின்றும் எம்மைக் கரையேற்றும் தந்தை தாங்களே" என்று பிரார்த்திப்போமாக.

## II

## ஞாநாசாரியரைக் கௌரவிப்பது எங்ஙனம்?

ஒருவன் தனது ஞானாசாரியரைக் கௌரவிக்க வேண்டுமாயின், அவரிடத்தும், அவாது உபதேசங்களிலும் முழுநம்பிக்கை வைத்து அவருக்குப் பிரியமான கொள்கைகளின் பிரகாரம் நடப்பதே உண்மை நெறியாகும். தனது குரு தன்னைத் தீநெறிக்கண் செலுத்தாரென்றும் தன்னை நன்னெறிக்கண் செலுத்தும் சக்தியுடையாரென்றும், அவாது உபதேசங்களை அனுஷ்டித்தால் இணையற்ற திருவருள் பாலிக்குமென்றும் நம்பாவிடில் அவ்வாசான் அடியின் கீழ் அமர்தல் கூடாது. மனதில் நம்பிக்கையும் பக்தியும் சிறிதுமின்றி வாயுபசாரத்துட னிருப்பானாயின் வஞ்சகனாவான். வஞ்சகரால் கடவுளை அறிதல் என்றும் முடியாது. ஆகையால் சிஷ்யத்தன்மைக்கு முதல்நிபந்தனை நம்பிக்கை யாகும். நம்புதலானது கீழ்ப்படிதலென்ற நற்செய்கையின்மூலமாக முதலில் வெளியாகும்.

ஓர் உண்மைச் சீடனானவன் தனது ஆசானது வார்த்தைகளை முற்றிலும் நம்பியதினால், அவரைக் கீழ்ப்படிந்து அவாது உபதேசங்களை யெல்லாம் கடவுள் கட்டளைகளென்றே ஏற்றுக்கொஞ்சமும் தவறாது பின்பற்றுவான். தனது ஆசானது உபதேசங்களினின்றும் யாதொரு நன்மையும் உண்டாகாம லிருந்தாலும், தான்செல்லும் நெறியின்கண் ஆயிரக்கணக்கான துன்பங்கள் பல பக்கங்களிலும் வந்து ஹிம்சித்த போதி

லுங்கூட ஓர் உண்மைச்சீடன் மனந்தளராது எந் நெறியைப் பின்பற்றினால் வாழ்க்கைத்தகுதி வாய்க்குமோ, அத்தகைய நெறியை வழுவாமல், முன்னினும் அதிகமாகப் பின்பற்றத் தலைப்படுவான். திடசித்தமும் பக்தியுமே அவனது காவற் சொற்களாகும். இவ்வுலகில் பெரிய இராணுவ வெற்றிகள் யாவும் சந்தேகத்துடனும் அரைமனதுடனும் செய்யும் ஊழியத்தினால் வாய்ந்தனவல்லாது, நம்பிக்கையினாலும் சந்தேக மின்றிக் கீழ்ப்படிதலினாலும், இராணுவத்தலைவரின் வார்த்தைகளைத்தட்டாது சேனைவீரர்கள் பூர்த்தி செய்வதினாலுமே அடையப்படுமென்று அவன் நன்குணர்ந்து, அதுபோலவே, மனிதனால் வெற்றிகளில் சிறந்தவெற்றியை, அதாவது தன்னுள்ளும், தன்னைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் தீமைகளை ஜயிக்கவேண்டின், ஓர்போர் வீரன் தனது தலைவனுக்குக் கீழ்ப்படிதலைக்காட்டிலும் மேலாக ஆசானுக்குக் கீழ்ப்படியவேண்டும். தனதறிவினாலுண்டாகும் முழு வல்லமை யுடனும் குருவின் உபதேசங்களைச் சிரமேற்றாங்கி அதன்படி அனுஷ்டிக்க வேண்டும். உறுதியின்மையுடனும், முழுமன மில்லாமலும் கீழ்ப்படிந்தால், அது ஒரு ஞானநெறியில் முயற்சிப்போனுக்குத் தோல்வியையோ, அல்லது அவனிஷ்ட பூர்த்தியடைவதில் தாமதத்தையோ தான் கொடுக்கும்.

சிலர் தங்கள் குருவிடமும் அவரது உபதேசங்களிலும் சந்தேகம் கொள்வதினால் தங்கள் ஞான வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்கின்றார்கள். தம்முள் சந்தேகமிருப்பதனால் குருவைச் சஞ்சலமறக் கீழ்ப்

படிகிறதில்லை. ஆகையினால் குருவினது உபதேசங்களின் பயனை ஒருபொழுதும் அனுபவிப்பதில்லை. இன்னும் சிலரில், சந்தேகமானது தன்னடக்கம் என்ற பந்தத்தை நழுவச் செய்கின்றது. அது காரணமாய் இந்திரியங்களின் விருப்பால் கவரப்பட்டு, முதன் முதலில், ஞான வாழ்க்கையை விரும்பி எந்த வஸ்துக்களை விஷமென மதித்து விலக்கியிருந்தார்களோ அவ்வஸ்துக்களில் இப்பொழுது விருப்பம் அதிகமாக ஏற்பட்டு, தலைகால் தெரியாமல் பிரவேசிக்கின்றார்கள்.சிலரைச் சந்தேகமானது புலனுகர்ச்சியிற் செலுத்தாவிடினும் மனச்சலிப்பின்பாற் செலுத்துகின்றது. இது சிற்றின்பம் நன்னெறியினின்றும் நம்மைத் தடுப்பது போன்று, நமது வாழ்க்கையின் முடிவை அடைவதினின்றும் தடுக்கின்றது. அவர்கள் தங்களது ஆசானது உபதேசங்கள் தாங்கள் விரும்பியதைக் கொடுக்கவில்லை யென்றும், எந்த ஆசானை யடைந்தால் பலன் சீக்கிரமேற்படுமோ அப்படிப்பட்ட வேறொரு ஆசானை வழிபட வேண்டுமென்றும் நினைக்கின்றார்கள். பிறகு பழைய குருவை விட்டுப் பிரிந்து புதிய குருவை யடைந்துஅவரது உபதேசங்களை யனுஷ்டிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். அந்தோ! இங்கும் விரைவில் ஏமாற்றம் அடைகின்றார்கள். மறுபடியும்சந்தேகமானதுஅவர்களது மனதிற்புகுந்து "வேறொரு புதிய ஆசானைக் கண்டு புதிய உபதேசங்களைப் பெறுவது உசிதம்" என்று கூறுகின்றது.கடைசியாக உருளுங்கல்போன்று, ஒரு ஆசானைவிட்டு மற்றொரு ஆசானைத் தேடித்திரிந்து முடிவில் ஞானப்பேற்றை யடையாது ஏமாறுகிறார்கள்.

இத்தகைய மானிடர்களது தன்மைகளை விளக்குவதற்குப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சிறு கதையைச் சொல்வது வழக்கம்.

ஒரு காலத்தில் ஒரு மனிதன் எப்பொழுதும் வற்றாமலிருக்கும்படியான உண்ணீர் ஊற்றினை உடைய கிணறு ஒன்றைத் தோண்ட உத்தேசித்தான். அதற்காகக்கிணறுதோண்டுவதில் திறமைவாய்ந்தஒருவனது யோசனையின்படி திறந்த வெளிகளில் ஒரு தகுந்தஇடத்தை ஏற்படுத்திக் கிணறு வெட்டுவதற்குரிய குந்தாலி, மண்வெட்டி, கூடை, கயிறு முதலிய சாமான்களைக் கொண்டு கிணறு தோண்டவாரம்பித்தான். கொஞ்ச ஆழம்வெட்டியதும், வழிப் போக்கன் ஒருவன், இவன் செய்வதையும் அப்பூமியின் நிலையையுங் கண்டு, கிணறு தோண்டுபவனைப் பார்த்து, 'நண்ப! நீ இவ்விடத்தில் வீணாய் வேலை செய்துகொண்டிருக்கிறாய். கிணறு தோண்டுவதற்குரிய விடம் இதுவல்ல. நீ நூறடி ஆழம் தோண்டினபோதிலும் கீழ் ஊற்று காண்பதரிது. அடிமட்டத்தில் கல்லும் கற்பாறைகளும் தான் கிடைக்கும்; வேறொன்றுங் காணமுடியாது. ஆகையால், என் யோசனையைக் கேட்பாயானால், நீ இவ்விடத்தில், கிணறு தோண்டுவதை விட்டு நான் காண்பிக்குமிடத்திற்சென்று தோண்டுவாயானால் கட்டாயம்பலனையடைவாய்' என்று சொல்லி ஓர் புதுவிடத்தைக் காட்டிவிட்டுத் தன் வழியே சென்றான். கிணறு தோண்டிக்கொண்டிருந்தவனும், அவன் வார்த்தையைக் கேட்டு, முன் கிணறு தோண்டின விடத்தை விட்டுவிட்டு, வழிப் போக்கனாற் காண்பிக்கப்பட்ட இடத்தில் புதி

தாகக் கிணறு தோண்டவாரம்பித்தான். சில அடி ஆழம் தோண்டினதும் வேறொரு வழிப்போக்கன் அவ்விடம் வந்து, கிணறு தோண்டுபவனை விசாரித்து யாவற்றையும் அறிந்துகொண்டு, அவனை அத்தொழிலினின்றும் நிவர்த்திக்க எண்ணி அவனைப் பார்த்து 'புது இடம் காட்டிய பின்னோனும் பழைய இடங்காட்டிய முன்னோனைப் போலவே பிழைபட்டான். ஆதலால் நூற்றுக்கணக்கான அடி ஆழந் தோண்டினனும் முரம்பு தவிர பிறிதொன்றும் அகப்படாது. நான் காண்பிக்குமிடத்தில் தோண்டுவாயானால், நிச்சயமாய்த் தண்ணீர் கிடைக்கும்' என்று சொல்லிச் சென்றான். இதைக் கேட்டதும் கிணறு தோண்டுபவன் முன்னர் யோசனை கூறியவனைச் சந்தேகித்துப் புது நண்பன் வார்த்தையை நம்பிப் பின்னும் சிறிது ஆழம் கிணறு வெட்டு முன்னரே மூன்றாவதாக ஒருவன் தோன்றி அவன் முயற்சியைப் பழித்துக் கீழ் ஊற்றுக் கிடையா இடங்களில் தோண்டி வீண் பாடுபடுவதை அவனுக்கு விளக்கித் தன் கொள்கைக்கு ஆதாரமாக வேண்டிய சான்றுகளையும் ஆதாரங்களையும் கூறி, அவன் பிழையை அவனே உணருமாறு செய்வித்தான். கிணறு வெட்டுபவன் தன் வேலை முழுதும் செய்வதை விட்டு, மூன்றாமவன் யோசனைப்படி தக்க இடம் தேடப்புகுந்தான். இவ்விதமாகத் தான் கொண்ட வேலையிலுறுதியின்மையால், ஒருவரது சொல்லையும் சரிவர நிறைவேற்றாதவனாகித் தன் முயற்சியினைக் கைவிடாது கிணறு தோண்டுதலாகிய தன் தொழிலினை முற்றுமாறு செய்யவில்லை. ஆதலால் கீழ் ஊற்றுப்

பெருகி மடையாய்ப் பாய்ந்து கிணற்றினை நிரப்பிக் காணமுடியாமற் போயிற்று.

கிணறு தோண்டினவனைப் போன்று அனேகர் சந்தேகத்தினாலும் உறுதியின்மையாலும் ஞான மார்க்கத்தில் விருத்தி அடையாமல் கெடுகிறார்கள். எந்த மனிதன் மோக்ஷத்தை அடைய விரும்புகின்றானோ அவன் முதலில் தன் குருவை நம்பி, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரால் நன்மையே வருமென்று நம்பி அவர் உபதேசங்களின்படி ஒழுக வேண்டும்.

குருவிசுவாசம் தொண்டாற்ற ஆசைப்படுவதால் வெளியாகும்.

எவன் தனது குருவினிடம் உண்மையான நம்பிக்கை வைத்திருக்கிறானோ, அவன் தனது குருவினிடமுள்ள நம்பிக்கையை உறுதி கூறி 'நான் அக்குருவினிடம் நம்பிக்கையும் பக்தியும் கொண்டவன்' என்று பகிரங்கமாக வெளியில் எடுத்தோதுவதில் திருப்திகொள்ளாது, தனது உடல் பொருள் ஆவி மூன்றாலும் தொண்டாற்றுவான். உண்மையான விசுவாசம் அல்லது திட பக்தி எப்பொழுதும் மனிதர்களை நற்செய்கைகளிலும் பரித் தியாகத்திலும் செலுத்தும். அன்றியும், ஒருவரது நம்பிக்கையை அளவிட வேண்டுமாயின், அவரது பரித்யாகமே சிறந்த அளவுகோலாகும். நம்பிக்கை என்பது சிற்சில மந்திரங்களை நாக்கினால் மாத்திரம் உச்சரித்தல் எனவும், வீண்பகடிப்பேச்சு எனவும் பொருள் படுமாயின், உலகிற்றோன்றிய பெரிய ஆசாரியர்களால் அது அவ்வளவுதூரம் போற்றப்பட்டிராது. நம்பிக்கை

யிலிருந்து 'அகம்' அழிதல் இன்னும் இவை போன்ற நற்குணங்களும் உண்டாவதால் அதுமிகவும் புகழப் பட்டிருக்கின்றது. உண்மைச் சீடனானவன் தன் ஆசானுக்கு எப்பொழுதும் தொண்டு புரிவதற்கும், தன்னிடமுள்ள எல்லாப் பொருள்களையும் அவருக்காகத் தியாகம் செய்வதற்கும் தயாரா யிருப்பான்.

அவன் தனது சரீரபலத்தினால் தன்குருவிற்குப் பணிவிடை செய்கிறான். அவரது குறைகளை நிவர்த்தி செய்து சுகத்தைத் தருவதற்கானவற்றைச் செய்யச் சரீரப்பிரயாசைப் படுகிறான். அவருக்கு எத்தகைய குற்றேவல்களும் புரிகிறான். அவசியமான காலங்களில் அவரது காலைப்பிடிப்பதும், தண்ணீர்கொண்டு வருவதும், சமையல் செய்வதும் இன்னும் ஆயிரக்கணக்கான வழிகளில் அவருக்கு உதவி புரிகிறான். இதைச் செய்யுங் காலங்களில் எப்பொழுதும் முகமலர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனு மிருக்கிறான்.

பல்லாற்றானும் கடவுளை வாழ்த்தி இறைஞ்சுவதற்காக நமக்குத் தேகவன்மையும் மனோவாற்றலு மளிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பயிற்சியால் நாளடைவில் கடவுள் சந்நிதானத்தை அணுகலாம். அகண்ட பரிபூரணனான கடவுள் நம்மிடம் ஆவிர்ப்பவித்தற்கும், அவரைத் தோத்திரம் செய்தற்கும், அவரை அடைதற்கும் நமது கர்வத்தை அழித்து 'அகம்' என்பதை முற்றிலும் துறந்து சூனியமாக்கிக் கொண்டா லல்லது எவ்வாறு இயலும்? அப்படியாயின் யாவர்முன்பும் நம்முடைய அகங்காரத்தையும் பொய்யான தற்பெருமை உணர்ச்சியையும் திடீரெனத் துறக்கமுடியுமா? அகங்

காரமானது நமது இயற்கையி லாழமாக வேரூன்றி விட்டது. அதை எளிதில் அழிக்க முடியாது. ஆயினும் அதை எதிர்த்தே தீரவேண்டும். சிறிதுசிறிதாக அதை வெளியோட்ட வேண்டும். மனமாகிய அதன் பற்றுக் கோட்டையை அணு அணுவாகக் கீழே இழுத்துத் தள்ளவேண்டும். ஒரு பக்தியுள்ள பணியாளன் தனது எஜமானனுக்குத் தொண்டு புரிதல் போலவும், தனயன் தந்தைக்குப் பணிவிடை யியற்றுதல் போலவும், ஒரு சீடன் தன் குரு முன்பு தற்பெருமையை அழித்து அவருக்குத் தன் தேகத்தாற் தொண்டாற்றுவதைவிட இத்துறையில் வேறுவிதமாய் ஆரம்பஞ் செய்யமுடியுமா ?

மாணவர்களில் மூவினம் உண்டு. தலைமாணவர்கள் தங்களது குருவினது விருப்பங்களை அவர் வெளியிடுமுன்னதாகவே குறிப்பால் உணர்ந்து பூர்த்தி செய்வார்கள். தங்களது ஆசானிடத்திற் கொண்ட வரம்பு கடந்த பக்தியினாலும் நுண்மையாக உற்றறியும் சக்தியினாலும் குருவுக்குச் சந்தோஷத்தையும் சுகத்தையும் தரக் கூடியவைகளையும் அனேகமாய்ச் சரியாகவே ஊகித்துணர்வார்கள். அவருக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற ஆசையினால் அவருக்கு அமைந்துள்ள விருப்பு வெறுப்புக் குறிகளையும் பழக்க வழக்கங்களையும் செவ்வையாய்க் கற்று வல்லாராய் அவருக்கு எச்சமயத்திலும் எது தேவையாயிருக்குமென்பதை அவர் கூறு முன்னரே தெரிந்து கொள்கிறார்கள். இவ்விதமாகப் பணி செய்வதில் அவர்கள் எப்பொழுதும் முனையாய் இருப்பர். இரண்டாம் இனத்துச் சீடர்கள்

தங்களது ஆசாரியன்மார்களுக்குத் தேவையானவற்றைத் கூறுதுணரும் சக்தியற்றவர்களா யிருப்பினும், அவைகளைச் செய்து முடித்தற்கும், அவருக்குத் திருப்தி தரக்கூடியவற்றைச் செய்யவும் ஆவலாயிருப்பார்கள். எனினும் வேண்டுவனவற்றைச் செய்வதற் கறிகுறியான உத்தரவை எதிர்பார்த்திருப்பர். குருநாதர் தம் விருப்பத்தை வெளியிடல்வேண்டும். இன்றேல், இவர்களால் எது ஆசாரியருக்கு சுகத்தையோ அல்லது கஷ்டத்தையோ கொடுக்கு மென்பதைத் தெரிந்துகொள்ள இயலாது. உயர்ந்த குரு பக்தியிற் குறைந்தவர்களாயினும் இரண்டாம் இனச் சீடர்கள் குருவினிடம் நம்பிக்கையிற் குறைவதில்லை. மூன்றாந் தரச் சீடர்கள் குருவினது விருப்பங்கள் நன்றாகத் தெளிவுபட விளக்கப்பட்டாலும் அவைகளை அவர்கள் சரிவர நிறைவேற்றுவதில்லை. சிற்சில சமயங்களில் அவர்கள் ஆசாரியனது வார்த்தைக்குக் கீழ்ப்படியினும் எப்பொழுதும் அவ்வாறிருப்பதில்லை. பக்தி பரவசர்களா யிருக்குங்காலையில் குருவிற்குக் கீழ்ப்படிந்து பக்தியுடன் பணி செய்யப் பிரியப்படுவார்கள். ஆனால் சிறிது காலத்திற்குள் இவ்வெண்ணம்மாறிச்சந்தேகம், தாமதம், வேண்டு மெனவே ஆணையைக் கடத்தல் முதலியன உண்டாகின்றன. ஓர் உண்மையான சீடன் [ஆத்ம ஞானசக்தி வாய்ந்த சீடன்] இந்த மூன்றும் வகுப்பிற் சேர ஒருபொழுதும் விரும்பான். தன்னியற்கையில் ஏதாவது சோம்பலும், தாமதமும், சந்தேகமுமிருக்குமாயின், அவை யாவற்றையும் உதறித் தள்ளிக் குருவினது பணிக்கே தன்னை முழுமனதுடனும் அர்ப்

பணஞ்செய்வான். தான் தலை மாணவனாகவோ அல்லது இடை மாணவனாகவோ இருக்க விரும்புவானேயன்றிக் கடை மாணவனோடு சேருவதை ஒருபொழுதும் விரும்பான்.

ஓர் உண்மைச் சீடன் தனது குருவிற்குச் சரீரத்தினால் மாத்திரமின்றி மனதினாலும் தொண்டு புரிகிறான். அதாவது ஏகாக்ரக மனோ வன்மையுடன் குரு சேவை செய்கிறான். தனது பக்தியைச் சிதைக்கக்கூடியவைகளை மனதில் ஒரு பொழுதும் நினைப்பதுமில்லை; உணர்வதுமில்லை.

உண்மைச் சீடன் தூய மனதினனாய்க் குருவிற்கு எப்பொழுதும் சிரத்தையுடன் பணிவிடை செய்வான். ஆசானைப்பற்றி எப்பொழுதும் எம்முறையிலும் தீதாக நினைப்பதில்லை. சிற்சில காலங்களில் அன்னியரது குணங்களில் நற்றன்மையையே காண்கிறோம். அச்சந்தர்ப்பங்களில் குதர்க்கமாய குண தோஷம் காணும் தன்மை நம்மியற்கையிலில்லாமலிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் இச்சந்தோஷகரமான தன்மைக்கு அன்னியராகிறோம். இக்காலங்களில் அன்னியரிடமுள்ள தோஷங்களைப்பற்றிப் பேசுவதற்கு நம் மனம் இடங்கொடுக்கின்றது. இத்துடனில்லாது விதண்டாவாதிகளாகவும் ஜன விரோதிகளாகவும் ஆகி எல்லோரிடமும் குற்றங் காணலையே கொள்கிறோம். இத்தகைய குற்றங்காணுங் குணம் நம்மில் வருங் காலத்தில் நாம் யாரிடம் எவ்வளவு பூரண நம்பிக்கை வைத்திருந்தோமோ அவர்களா லுண்டாகும் நன்மையில் சந்தேகங்கொள்ளத் தலைப்படுகின்றோம். இக்காலத்

தில் நமது அரிய நண்பர்களும் நமது நன்மையை நாடு வோர்களிற் சிறந்தவர்களும் சுயநல முள்ளவர்களாக வும் உதார குணமற்றவர்களாகவுந் தென்படுகிறார்கள். பேரன்பு வாய்ந்த கிட்டிய உறவினரும் முன் சொன்ன வர்களைவிடச் சிறந்தவர்களாகத் தோன்றுகின்றார்க ளில்லை. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் அத்தகைய தன்மை தன்னிடம் வாராவண்ணம் காத்துக்கொள்ள வேண்டும். மேலும் ஞானத்தை நாடுவோன் அதிக கவ னத்துடனிருக்க வேண்டும். ஏனெனில், அத்தகைய மனநிலை வாய்ப்பின், மனத்தெளிவுள்ள சமயங்களில் அவன்செய்துகொண்ட உறுதிக்குமாறாக நம்பிக்கையுங் குரு பக்தியும் நீங்கி, குருவினது நடக்கையில் குற்றம் நாடத் தொடங்குவான். இத்தகைய தீய மன நிலை யின் திறத்தால் மாறுபட்டு அவன் கண்களால் உண்மை யில் குற்றமுமில்லா விடத்தும் குற்றத்தையே காண் பான். சாதாரண மனிதர்களைப்பற்றிய அபிப்பிராயங் களிலேயே மனிதர்கள் மருட்சியடைந்து விடுகிறார்கள் என்பதை நன்கு அறிந்த ஒரு சிஷ்யன் தனது ஆசா னைப்பற்றி எத்தகைய தீய எண்ணமும் தன் மனதில் தங்க இடனளிக்கலாகாது. அவரைப்பற்றி யாரேனும் குறைகூறின் சீடன் செவி சாற்றாது அங்கிருந்து அகல வேண்டும். மரியாதை, புகழ்ச்சி, வினயம் இவைகளெல் லாம்கடவுளுக்குப்பிரியமான குணங்களெனநன்கறிந்து, தீயோர்களது தீமொழிகளைக்கேட்டுத் தன் நற்குணங் கள் விருத்தியாகாவண்ணம் தடுத்தல்கூடாது. ஏதாவ தொரு சமயத்தில் ஆசானது நடத்தை ஐயப்பாடுடை யதாயிருப்பின், உடனே 'ஆசான் தம் நிலையினின்

றும் தவறி விட்டார். இனி நாம் அவரைப் பின் பற்றுதல் கூடாது' என்ற முடிவிற்குத் திடீரென வரக் கூடாது. ஆனால் கடவுளைத் தன் சந்தேகத்தைப் போக்கும்படியாகப் பிரார்த்திக்க வேண்டும். தனது ஐயப்பாட்டை ஆசானிடம் தெரிவிப்பின் அவர் அதைத் தீர்த்து புத்திமதியும் சொல்வார்.

ஒவ்வொரு சீடனும் ஆசானிடம் கபடமற்றவனாக விருக்கவேண்டும். நிரம்பிய அந்தக்கரண சுத்தியின்றி யாவராலும் ஞான நெறியிற் செல்வதரிது. வஞ்சகர்கள் தங்களைத் தாங்களே ஞான நெறிக்குரிய சக்திகளினின்றும் கெடுத்துக் கொள்கின்றார்கள். ஆகையினால், அவர்கள் மனிதர்களில் தம்மைத் தாமே வஞ்சிக்கும் துரதிஷ்டசாலிகளாவார்கள். ஆசானிடத்திற் பொய் பேசுதலும் வஞ்சகமாக நடித்தலும் ஒருவனது ஞானத்தின் அழிவையே கொடுக்கும். இதற்காகத்தான், வைத்தியர்களிடமும் நியாயவாதிகளிடமும் (வக்கீல்) குருவினிடமும் உண்மையையே பேசவேண்டுமென்ற பழமொழி நம்நாட்டில் வழங்கிவருகின்றது. தனது சரீரத்தைப்பற்றியோ, வியாதிகளைப்பற்றியோ ஒருவன் வைத்தியனிடம் பிழையுரைப்பானாயின், அவன் சொல்வதை நிஜமென்று நம்பி, வைத்தியரும் தப்பாக மருந்து கொடுத்துவிடுவார். வியாதியினின்றும் நிவர்த்தியடைய மாட்டான். அதேமாதிரி வக்கீலிடமும் விஷயங்களைப் பூராகவும் மறைத்தோ, அல்லது மாற்றியோ சொல்வது அவரைத் தப்பாக வாதம் செய்யும்படிச் செய்து நீதிமன்றத்தில் தோல்வி அடையச் செய்யும். குருவினிடம் ஒருவன் வஞ்சித்துப் பொய்யுரைப்பானாயின்,

ஞான மார்க்கத்திலுண்டாகும் வியாதிகளுக்குச் சரி யான மருந்து கொடுப்பதினின்றும் அது அவரைத் தடுத்துவிடும். மேலும், பொய்யுரைத்தலால் இணை யற்ற ஞானமார்க்கத்திற் குரிய (அதாவது நியாய மான வாழ்க்கைக் குரிய) நற்பயனை அடையாது போவோம்.

ஓர் உண்மைச் சீடனானவன் தன் குருவிற்குத் தனக்குரிய பொருள் கொண்டு தொண்டு புரிகிறான். தான் ஆசானது அடிமை யென்று நினைத்துத் தன்னை யும் தனது பொருள்களையும் கடவுளுடைமையாகப் பாவிக்கிறான். குருவினிடத்திலேயே கடவுளைக் காண் பதினால், அவன், தன் குருவானவர் எப்பொருளைத் துறக்கச் சொன்னாலும் சிறிதும் அதற்குப் பின்ன டைவதில்லை. குருவினிடம் கொடுத்தபொருள் எல்லா வற்றையும் அவர் கடவுள் பொருட்டே உபயோகப் படுத்துவார் என்று அவன் நன்கறிவான். பொருள் யாவும் கடவுளது மகிமையை வெளியிடுவதற்கும், கட வுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஆன்மாக்களின் நன்மைக் காகவும், தம் கடமையைச் செய்து முடித்தற்பொருட் டும் உபயோகப்படுத்தப்படுமாயின், அவை ஒருவனது ஞானமுன்னேற்றத்திற்கு இடையூறாக விரா. ஆனால், அவை மக்கள் மனத்துள் பொருளாசையைத் தோற்று வித்தோ, அல்லது அதனை விருத்தி செய்தோ பாச பந்தத்தை உண்டுபண்ணுமெனின் கலப்பற்ற தீமை யாகக் கருதற்பாலன. இம்மெய்மை யுணர்ந்தே ஓர் உண்மைச் சீடனானவன், தனது ஞானசிரியர் பொருட் டுத் தனது பொருள்களைத் தியாகம் செய்ய என்றுஞ் சித்தனாயுளன்.

இப்படியாகப் பக்திவாய்ந்த ஒரு சீடன், உடல், பொருள், ஆவியால் தன் குருவிற்குத் தொண்டாற்றி, அதன் மூலமாகக் கடவுளைத்தொழுது துதிக்க முனையாயிருப்பன்.

குருவானவர் அனேகமாய்த் 'தனக்குத் தானே துணை' என்பதையே வாழ்க்கையின் முக்கிய நோக்காகக்கொண்டு ஒருவர் பணியையும் சற்றும் எதிர்பாராத சன்னியாசியே ஆவர் என்று எண்ணுவதுண்டு. குருவானவர் அன்னியர்களுதவியை நாடாமலும், அவரது உபசாரங்களை ஏற்றுக்கொள்ளாமலும், அவர்கள் தம்மைப்பற்றி நன்மையாகவோ அல்லது தீமையாகவோ நினைத்தலைப் பற்றிக் கவலையுறாமலும், பணத்தை வேண்டாமலும் இருக்கின்றாரென்று வைத்துக்கொள்வோமாயின், எவ்வாறு ஒரு சீடன் அக்குருவிற்கு மெய், பொருள், ஆவிகளாற் தொண்டு புரிய முடியும்? அப்பொழுது ஒரு மாணாக்கன், தனது ஆசானுக்குத் தொண்டு புரிவதினின்று விடுபட்டான் என்றும், குருவிற்காகச் செய்ய வேண்டிய தியாகச் செயல்களினின்றும் நிவர்த்தியாய் விட்டதாகக் கருதலாமா?

குருவானவர், தமது சரீர சுகத்திற்காகச் சீடனது தியாகச் செயல்களை விரும்பாராயின், அதிலிருந்தே சீடனானவன் தான் தனது குருவிற்கு மெய், பொருள், ஆவி முதலியவைகளாற் செய்ய வேண்டிய கடமையி னின்றும் நீங்கிவிடவில்லை. நல்லவைகளை விருத்தி செய்வதற்காகவும், எல்லாக் காரியங்களிலும் பொதுஜன நலத்தை மேன்மேலும் விருத்திசெய்வதற்காகவும், சிஷ்யனானவன் உடல் வாயிலால் பாடுபட

வேண்டும். குருவானவர், 'யான்' என்ற அகங்காரத்தை ஒழித்து, பிறர் நலத்திற்காகத் தம்மை அர்ப்பணஞ் செய்திருப்பதாலும், மாணவனும் தனது குருவானவர் எந்த இலக்ஷியங்களுக்காக வாழ்ந்து கஷ்டப் படுகின்றாரோ, அந்த இலக்ஷியங்களுக்காகத் தானும் வாழ்ந்து கஷ்டப் படுவானாயின், தனது குருவிற்குத் தொண்டு செய்தவனாகிறான். குரு நமது சரீரப் பிரயாசையை விரும்பாராயின், அவருக்கு எத்தொழிலில் பிரியமோ அதற்குரிய பிரயாசையைத் தேடவேண்டும். நமதுசரீரப்பிரயாசையில் சிறிதுபாகம் பொதுஜன முன்னேற்றத்திற்காகத் தியாகம் செய்யவேண்டும். அப்படிச் செய்யின் நமது ஆசானுக்குத் தக்கமுறையில் தொண்டு புரிந்தவராவோம். மனோபூர்வமாய் அவருக்குத்தொண்டாற்ற விரும்பின், அவரது உதாரணங்களையும், உபதேசங்களையும் எப்பொழுதும் ஞாபகத்துள் வைத்து நமது மனதைத் தீய எண்ணங்களினின்றும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஆசானையும் அவரது உபதேசங்களையும் மறப்பின், அது ஆபத்திற்கே மூலகாரணமாகும். சோதனை காலங்களில் ஆசானது சத்வகுணங்களையும், அவரது ஆத்மவெற்றியையும், அவரது தியாகத்தின் ஞாபகத்தின்மிக்க காக்கும் கருவியாதொன்றுமில்லை. காதுகளில் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக்கும் அவரதுஇனிய சொற்களே முத்திநெறிக்கண் நேரும் ஆபத்துக்களை முன்னறிவிப்பனவாம். வேண்டிய காலங்களில் ஆசானது வார்த்தைகளை ஞாபகப் படுத்திக்கொள்ளச் சக்தியற்றவன், பரிதாபகரமான ஞானநிலையி லிருக்கின்றவனாவான். அத்

தகைய வ்யூதிஹ்யம்ஸ: மறதி, ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையிற் கூறியது போன்று, நமது மனோமுடிவைக் கெடுத்து, நியாயத்தைக் கொள்ளவேண்டிய காலத்தில் தவறைத் தழுவும்படி செய்து இறுதியாக நம்மையும் நசிக்கச்செய்கிறது. ஆகையால், ஆசானது சீரியகுணங் கள் எப்பொழுதும் மனதிற் பொறிக்கப்பட் டிருக்க வேண்டும். அவரது பொன்மொழிகள் மனமெனும் பொக்கிஷப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும்.

நமது மனோசக்திகளைத் தீயசெயல்களுக்காகத் துர்விநியோகப் படுத்தாது ஆசானை மரியாதைசெய்தற் பொருட்டு உபயோகப் படுத்தவேண்டும். பின்னும், எவையெவை மேன்மையானசெயல்களோ அவையவை களுக்காகவும், ஜனசமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடிய செயல்களுக்காகவும் உபயோகப் படுத்தி, அதன் மூல மாகவும் குருவிற்கு மரியாதை செய்யவேண்டும். மருட்சி கொண்ட மானிடர் அநேகர் உலகிலுளர். அன்னோருக் குத் தீயவைகட்கும், நல்லவைகட்கும் வித்தியாசம் தெரியாது. நல்லவைகளைத் தழுவாது தீயவைகளைத் தழுவுகின்றனர்கள். அத்தகையோர்களுக்கு நன்ஞானத் தைக் கொடுத்து அஞ்ஞானத்தை ஓட்டப் பிரயத்தனப் படவேண்டும். தங்கள் துர்ப்போதனையால், பாபத்தி லீடுபட்டிருப்போர்களை அதினின்றும் நீக்கி, அவர்களைப் புனிதர்களாகவும், தெய்வபக்தி யுள்ளவர்களாகவும் மாற்றப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். உனது உப தேசத்திலுக் கேற்ப நீயே ஒழுகிவந்தாலன்றிப் பிறரை உன் உபதேச மொழிகளான் வழிபடுத்தற் குரியனு

காய் என்பதையும், பிறர் குற்றங் களைவதன் முன் தன் குற்றங் களைதல் வேண்டும் என்பதையும் நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். ஒருவன், தான் புத்திமானாகவும் பரிசுத்தனாகவுமிருந்து அயலாரையும் புத்திமான்களாக வும் பரிசுத்தர்களாகவும் மாற்றவேண்டும். உன் குரு நாதரை உன் மனோபாவங்களான் துதித்துத் தொழும் புகழ்மை முறைகளுள் இது பிறிதொன்றாகும்.

குருவானவர் உனது செல்வப் பொருள்களை வேண்டாராயின், அவற்றைக் குருவின் கீர்த்திக்காக அநேக தர்மவழிகளினும், ஏழைகளுக்காகவும் செலவு செய்ய வேண்டும். கடவுளிடத்தும் மானிடர்களிடத் தும் உள்ள அன்பினால் செய்யப்படும் ஜீவகாருண்ய மும் தர்மமும் வாய்ந்த செயல்கள் போன்று கடவுளுக் குகந்ததும், ஞானசாரியருக்குச் சந்தோஷந் தரக்கூடி யதுமான செயல் வேறொன்றுங் கிடையாது. இத்த கைய செயல்களினால், பரித்தியாகம் என்ன வென்ப தைத் தெரிந்து 'மம'காரத்தைக் குறைத்துக் கொள்கி றோம். நமது மனதிலிருந்து அறியாமையையும், அகங் காரத்தையும் துடைப்போமாயின், மனதை ஞானோ தயமாவதற்குரிய ஓர் இடமாகச் செய்யலாம். மானி டர்களிடம் தர்மம் பொருந்தி யிருக்குமாயின், இவ் வுலகவாழ்க்கை தேவலோக வாழ்க்கைக்கு ஒப்பாகு மன்றோ? துக்கத்திற்கும், பாவத்திற்கும் பதிலாக, கடவுளது புகழும், கலப்பற்ற சந்தோஷமும் எங்கும் நிறைந்திருக்குமே. சண்டை சச்சரவுகளுக்குப் பதி லாக இன்பமும், மனிதர்களுக்குள் ஆனந்தமான உறவு முறையும் உண்டாகுமே. உயிர் வாழ்க்கைக்காக ஏற்ப

டும் சச்சரவுகளினுலும், வாழ்க்கை யின்பங்களை அனு பவிக்க விரும்புவதாலும், அதிகாரம் பெறவேண்டு மென்றஆசையினுலும், மனிதர்கள் மனத்திடை அநேக விதமாக 'தான்' எனும்அகந்தை உண்டாகிறது. அதன் பயனுக மனிதர்கள் தாங்கள் ஏனையோர்களிலும் வேரு னவர்கள் அல்லவென்பதை அடியோடு மறந்து, அநே காது வாழ்க்கையின்பங்களைக் கெடுக்கத் தயாராயிருப் பதுமன்றி, அவர்கள் இகபர சாதனமாகும் பக்குவ மான நிலையை அடையவொட்டாமல் தடுக்கின்றார்கள். இத்தகைய அகந்தை அயலாரது விருத்திக் கிடையூ ருக விருப்பதுட னில்லாது அவர்களது வாழ்க்கைக்கு நிச்சயமாய்த் துன்பத்தையும் கொடுக்கின்றது. மானி டர்களுக்கு இழைக்கும் இத்தகைய தீங்குகள் அறச் செயல்களினுல் ஒருவாறு திருத்தப்படுகின்றன. சுய காரியத்தால் விளைந்த தீங்கினையும், அகங்காரத்தினுல் ஏற்பட்ட தீமைகளையும், ஓர் வகையால் மனிதர்கள் திருத்திக்கொள்வதைக் காணக் கடவுள் சந்தோஷமுறு வர். கடவுளுக்குகந்த ஒருவனது எச்செயலும், பிறர்பொ ருட்டாகச் செய்யும் நல்லொழுக்கம் யாதாயினும் அவ னுடைய ஆசானுக்கு அழியாப் புகழைக் கொடுக்கும். ஏனெனின், அவர் உபதேசம் பலனெய்தி உளது. அக விருளை முற்றிலும் நீக்காவிடினும், சிறிதளவேனும் போக்கியுள்ளதென்பதை அச்செயல் மெய்ப்பிக்கும். நீ தர்மவானுகவும், நன்னடக்கையுடையவனுகவு மிருப் பாயாயின், தோத்திர வகையான் போற்றுவதைவிட நல்லொழுக்க வாயிலான் உன் குருநாதரை மேம்படுத்து கின்ருய். ஆம், இவ்விதம் போற்றுவது வாய் வார்த் தையால் புகழ்வதைவிடச் சாலவும் நன்று.

அநேகர் கம்பீரமான சொற்றொடர்களால் தங்களது குருவின் புகழைச் சொல்லக்கேட்டிருக்கிறோம். நம்மில் யாராவது அவர்கள் குரு சொல்லும் விஷயங்களிலிருந்து வேற்றுமைப்பட்டாலோ, அல்லது அவரது உபதேசங்களுக்கு மாறாக நடந்தாலோ தாங்க முடியாத கோபம் அல்லது பழிவாங்குந் தன்மையுடையவர்களாக ஆகின்றார்கள். தங்கள் ஆசானது நடை, உடை, பாவனை முதலியவற்றை மேற்கொண்டு நடிப்பவர்களையும் காண்கிறோம். இப்படிச் செய்வது தான் ஆசானைக் கௌரவிக்கும் சரியான முறையென்றும், அவைகளைச் செய்யாவிடின் அவர்களுக்கு ஆசானிடமுள்ள பக்தி பூரணமடையாது என்ற நம்பிக்கையினாலும் இவ்வாறு செய்கிறார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களைக் கொள்ளுதல் சரியல்ல வென்றும், ஆசானிடம் தனக்குள்ள பக்தியையும், நன்மதிப்பையும் வெளியிட இவை சரியான மார்க்கங்களாகாவென்றும் ஒரு அறிவாளி எளிதில் உணரக்கூடும்.

ஒரு குருவினது மகத்துவம், பொது ஜனங்களைவிட ஆத்ம ஞானத்தில் அவர் உயர்ந்திருப்பதினாலும், பரிசுத்தராகவும், தெய்வபக்தி மிகுந்தவராகவு மிருப்பதினாலும், கடவுளறிவைப் பெற்று அதனைப் பரவச் செய்வதினாலும் விளங்கும். அக்கொள்கை அல்லது இக்கொள்கையுடையா ரென்றாவது, நடைவிசேஷமும், சொல்வன்மையு முளரென்றாவது, அல்லவாவது, அவர் நடாத்தும் உண்மை ஞானவாழ்க்கையே அவரை எல்லாவித கௌரவத்திற்கும் உரியவராக்கும். ஆத்ம ஞானம் கௌரவிக்கத் தகுந்ததே யல்லாது, அதை வெளி

யிடும் சம்பவங்களுக்காக வல்ல. ஒரு ஆசான் சைவ சமயத்தையோ அல்லது வைஷ்ணவ சமயத்தையோ பின்பற்றினுலென்ன? எப்பாஷையிற் போதிப்பினும் எத்தேசத்தில் உபதேசிப்பினும், சொல்வன்மையிருப்பினும் இல்லாவிடினும் என்ன? இவைகளெல்லாம் அனுவசியமானவைகளல்லவா? புத்திமான்கள் குருவினது நடத்தையைத்தான் கவனிப்பார்கள். மெய்யொழுக்கம் குருவினிடம் இல்லாவிடின், அவர் சப்த ஜாலம் வாய்ந்த ஒலிக்கருவியினும் உயர்ந்தோராகார். புத்திமான்கள், *குருவானவர் கடவுளிலேயே யீடுபட்டிருக்கிருரா? வேதோத்தமாக விளங்குகின்ருரா? தீநெறியினின்றும் விலகியிருக்கிருரா? ஆசையை அடக்கியிருக்கின்ருரா என்பவைகளையே வினவுவார்கள். அவர் எச்சமயத்தவராயிருப்பினும், இக்குணங்களுக்கு உறைவிடயாயிருப்பின், அவர் எல்லாவித மரியாதைகளுக்கும் உரியவராவர்.

எச்சீடன் தனது ஆசானைச் சரியான முறையில் கௌரவிக்க விரும்புகின்ருனே, அவன் குருவினது வெளித்தோற்றங்களைப் பின்பற்ருது மேற் சொன்ன நற்குணங்களைக் கிரகித்து எப்பொழுதும் கடவுளிலீடுபடுவதையே கற்கவேண்டும். மெய்நூல் அறிவினைப் பெறப் பெருங்காதலுற வேண்டும். தீய நடத்தைகளினின்றும் விலகி, ஆசையை அடக்கி, எப்பொழுதும் பரிசுத்தனுயிருக்கவேண்டும். அப்படிச் செய்யின் குறுகிய நோக்கத்தாலுண்டான மதத்துவேஷம், மூட வைராக்கியம், பழி வாங்குங் குணம் முதலியன நீங்

* ஶ்ரோத்ரியோ ஃவூஜிநொஃகாஹேதஷு |

கும். தன் குருவைப்பற்றிய மூடபக்தியும், அவரது புற நடவடிக்கைகளைப் போல் நடிப்பதும் ஒருவனை உண்மைச் சீடனாக்கி விடா. ஆசானது அகவாழ்க்கையை அனுசரித்து ஒழுகுதலினாலேயே உண்மைச் சீடனாகலாம்.

ஒரு பிதா, தனது குமாரன் தன் சாயலைக்கொண்டிருப்பதினாலும், தன்னைப்போல நடிப்பதினாலும், பலர் கூடும் சபையில் தன்னைப் புகழ்வதினாலும் அவனிடம் பிரியத்தைக் கொள்ளார். ஆனால், தன் குமாரன் தன் தந்தை இச்சையின்படி உயர்ந்த நன்னெறி வாழ்க்கையிலமர்ந்து தான் கொண்டுள்ள சீரிய நல்லொழுக்கத்திற் கனுகுணமான கொள்கைகளையே அவனும் அனுசரிக்கிறானா என்றே கவனிப்பார். அதே போன்று, ஒரு ஞானசாரியனும், ஒரு சீடன் தம்மைப் போல புறவாழ்க்கையை நடிப்பதாலும் தான் கூறிய ஞான மொழிகளை எப்பொழுதும் பேசுவதாலும், பயனற்ற சொற்களினால் தம்மைப் புகழ்வதாலும் அவனிடம் பிரியங்கொள்ளாது, தன்னைப்போல சீடனிடம் உத்தம ஞானம் வளருவதைக் கண்டாற் பிரியப்படுவார். தான் எந்த உயர்ந்த ஒழுக்கத்திற்குரிய கொள்கைகளை விரும்பி, அனுஷ்டித்தாரோ அவைகளைச் சீடனும் கிரகித்து உயர்ந்த இலக்ஷியத்திற்குரிய வாழ்க்கையை அடைய அவன் இடைவிடாது முயற்சி செய்வதைக் காணின், அவர் மனம் சந்தோஷத்தினாற் பூரிக்கும். உண்மை வாழ்க்கையை யன்றி வெறும் வார்த்தைகளினால் தான் நீதியான ஒழுக்கத்தை உடையவனாகச் சொல்லிக் கொள்வதை ஓர் தகப்பனும் ஆசானும்

விரும்பார்கள். ஆகையினால் அவரது வாழ்க்கையின் கொள்கைகளைக் கிரகித்து அவர் எந்த இலக்ஷியங்களுக்காக வசிக்கின்றாரோ அவ்வண்ணமே தானும் வசித்துத் தனது ஆசானைக் கௌரவப் படுத்தவேண்டும்.

தமது சொந்த உயிரைவிட இந்த இலக்ஷியங்களே ஆசானுக்குப் பிரியமென்பதையும், இக்கொள்கைகளை விட்டு விடுவதைவிடத் தான் உயிர் துறப்பதே மேல் எனக் கருதுவர் என்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நீ உண்மைச் சீடனாக விருக்க விரும்பின், அந்த இலக்ஷியங்களிடமும் கொள்கைகளிடமும் அன்பையும் பற்றையும் அடையவேண்டும். அவற்றிற்காகவும், மக்கள் மனத்துள் அவை குடி கொள்ளுமாறும் உழைத்து வாழ்.

இவை குருவை உண்மையாகக் கௌரவப்படுத்தும் முறைகளுட் சில.

இரசவாதக் கல்லின் சம்பந்தத்தை விட ஒரு மெய்க்குருவின் சம்பந்தம் மிகவும் வன்மையும் நன்மையும் வாய்ந்ததென்று பகவான் ஸ்ரீ சங்கராசாரியார் 'சதஸ்லோகி' என்ற நூலிற் சொல்லுகிறார். இரசவாதக் கல் தனது ஸ்பரிசத்தால் தாழ்ந்த உலோகத்தையும் தங்கமாக்கிவிடும். எனினும், தன்னைப்போன்ற இரசவாதக் கல்லாகச் செய்யமுடியாது. ஆனால் குருவோ சீடனைத் தன் மயமாக்குகின்றார். மஹா பாபியையும் தம்மைப்போன்றதொரு மஹாத்மா வாக்குகின்றார்.

மனிதர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்க்கைப் பிணிகளைப் போக்குவதற்குரிய சஞ்சீவியையும் மிகுந்த பொருு ளீட்டுவதற்குக் காரணமான இரச

வாதக் கல்லையும் கண்டுபிடிக்க வீணே பிரயாசைப்படு கின்றார்கள். ஆனால், என்றும் அழியாக் கடவுளறிவை யும், உலகத் துன்பங்களினால் தீண்டப்படாத சாசுவத வாழ்க்கையையும், தன்னைப் போலவே பூர்த்தியான நிலைக்கு வளரும்படிச் செய்யச் சக்திவாய்ந்த குரு வைக் கண்டுபிடிக்க எத்துணைபேர் பிரயத்தனப்படு கின்றார்கள்! ஆகையால், நண்பர்களே! ஒரு உண்மைக் குருவைத் தேடுங்கள். தேடி அவரை நியாயமான முறைகளினாற் கௌரவப் படுத்துங்கள். இப்படிச் செய்தால்தான் உங்களது வாழ்க்கையின் மெய்ப்பயனை அடைவதற்கும், மனித சமூகத்தின் முன்னேற்றத் திற்கும் உழைத்தவர்களாவீர்கள்.

# III

## உண்மை ஞானாசாரியர் யார்?

தற்காலத்தில் மனிதர்களை முத்தி நெறிக்கண் சேர்க்கவேண்டி அநேகர் முன் வருகின்றனர். இத் தொழிற்குக் கடவுளால் சிறப்புடன் தாங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுளரென்றும் இத்தொழிற்கு வேண்டிய யோக்கியதை விசேஷமாய்த் தம்மிடத்துள்ளதென்றும் ஒழுக்கப் பயிற்சியான் இத்தொழிற்கு வேண்டிய பெருமை வாய்ந்துள்ளாரென்றும் பறைசாற்றித் திரி வோர் அநேகருளர். மேலும், இவர்கள் ஞானத்திற் காக வருந்தும் மானிடர்களுக்கு அவர்கள் சித்தியடை தற்பொருட்டு அநேக முறைகளைக் காட்டியும், புகட்டி யும், அவைகள் பின்பற்றப்படின், ஒவ்வொரு மானிட ஹிருதயமும் இயற்கையாகத் தேடும் பரிபூரணானந்த நிலை வெகு சீக்கிரம் அடையலாமென்றும் போதிக் கிறார்கள். ஆனால் இந்த ஞானாசிரியர்களாற் சொல்லப் படும் முறைகள் முரணியவைகளாயும், ஒன்றை யொன்று ஒவ்வாதவையாயு மிருத்தலால், முத்திப் பேறு அடைய வேண்டுமென உளம் பூத்துள்ள சாமான்யனொருவனுக்கு மையலைத் தோற்றுவித்துச்சந் தேகமும் குழப்பமும் விரவிய மன நிலையில் "எதை நாம் பின்பற்றவேண்டும்? இக்குருமார்கள் யாரே நம் மை நேர் வழிப்படுப்பார்" என்று தனக்குத் தானே வினவத் தலைப்படுவான்.

தங்கள் சுயநலக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக ஞானாசிரியர்கள் வேஷம் பூண்டு,

பொறுப்பற்ற குருட னொருவன், தன் இனத்தவர்களான குருடர்களைச் செலுத்துவதுபோலச் சிறிதும் அனுதாப மின்றி மானிடர்களுக்குக் கஷ்டத்தைத் தரும் நெறியினை அனுசரிக்கும் போலிகள் அநேகர் உளர் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டோமாகில், மேற்சொன்ன குழப்பமும் சந்தேகமும் உண்டாகுங் காரணத்தை நன்கு அறிந்துகொள்ளலாம். இதையே,

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே''

என்று திராவிட வேதம் வற்புறுத்துகின்றது.

செல்வாக்குப் பெறவேண்டும் என்னும் ஆசையும் பிறரை ஆண்டு அடிமைப்படுத்தல்வேண்டும் என்னும் பேரவாவும் மக்களுள்ளத்துள் இயல்பாகவே அமைந்துள. சீடர்களைப் பெறுதலாகிய எளிய முறையில் இவ்விச்சையைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு அநேகர் வழி காண்கிறார்கள். அதிகாரத்தை விரும்பும் ஒரு மனிதனுக்கு, மற்றொருவனை நாடி, அவன் முக்திக்குத் தான் பொறுப்பாளியாயிருப்பதாயும், அவன் காதுகளில் சிலபோதனைகளை யோதி, அவைகளை அவன் பின்பற்றினால் அவன் இறந்த பிறகு அவை அவனை மோக்ஷத்திற் செலுத்து மென்றும் சொல்லி, பிறகு அவனை அடிமை பூண்டொழுகும் தாசனாகச் செய்து கொள்வதைவிடக் கஷ்டமில்லாததொழில் வேறொன்று மில்லை. 'தன்னெஞ்சே தனக்குக்கரி' என்ற சீரிய கொள்கையுடைய ஒருவன், பிறனுக்குத் தான் ஞான

சிரியனுயமைதற்கான கடும் பொறுப்பிற்கு அஞ்சுவன் என்பதில் எட்டுணையேனும் ஐயமில்லை; எனினும், தற்காலத்தில் அநேகர் மனச்சாக்ஷிபாவது மடமையே என்றும், தமக்குச் சுகத்தையோ செல்வாக்கையோ தரவல்லன வென்று தாங்கருதுவனவற்றைத் தாம் தைரியத்துடன் தேடுவதை நாம் காணவில்லையா? இத்தகைய சந்தர்ப்பங்களில் பலரும் தம் ஞானசாரியர் நன்மையினை மட்டும் நாடித் தீமையினைத் தேடாது வழி நடத்தவல்லார் என்று உறுதிகொண்டாலன்றிக் கண்டகண்ட குருவினிடம் உபதேசம் பெறுதவாறு ஜாக்கிரதையாயிருப்பர். ஆகையால், யார் உண்மையான ஞானசாரியராயிருக்கலாம்? அவரது நடை, உடை, பாவனை முதலியன எவ்வாறிருக்கும்? என்பனவற்றைச் சிறிது சிந்தனை செய்வாம்.

முதன் முதலில் ஞானசிரியர் ஆத்மஞான ஒளி படைத்தவராய், உயர்ந்த அறிவைப் பெற்றவராய், ஏதோ ஒரு சமயத்திலல்லாது சதா கடவுள் ஐக்கியத்திலேயே ஆழ்ந்திருப்பவராக இருக்கவேண்டும். இந்த மெய்யறிவு விளக்கம், அதாவது தூய முத்தி நிலை எல்லோராலும் எளிதில் அடைய முடியாது. கடவுளே ஆதி குருவென்றும், அவரே முதல் ஞானசாரியரென்றும் முன்னமே கூறியுள்ளோம். ஞானோபதேசம் பெறுதற்கு ஏற்ற பெற்றி வாய்ந்த பண்டைய முனிவர்களுக்கும், மஹாத்மாக்களுக்கும் அழியாமையாகிய பாசத்தைக் கட்டறுப்பதற்கும் மாயைப் பிணியைக் கடந்து அப்பால் செல்லுதற்குமான இரகசியத்தை ஆதியில் உபதேசித்தருளியவர் கடவுளே. இவ்வாறு

கும் கர்ண பரம்பரை வரலாறு. இம்முனிகள் சுய நலக்களங்கமும் உலக இன்பப்பற்றும் அற்ற அகத் தூய்மை வாய்ந்தவர்கள். நீதி நெறியினின்றும் ஒரு சிறிதும் பிழையார்கள். அவர்கள் பிசக நேரிடும் சம்பவம் மிகவும் அரிது. நீதி நெறியினின்றும் தவறுதற்கு மிகவும் அச்சமும் கவலையும் உறுவார்கள். பண்டைக் காலத்திலிருந்தது போலவே இப்பொழுதும் அமைந்துள்ளது. எவர்கள் மனத் தூய்மையுடையவர்களாகவும் பரிசுத்த வாழ்க்கையை யுடையோர்களாகவு மிருக்கின்றார்களோ, அவர்களே கடவுளறிவிற்குரியவர்களாவார்கள். கடவுட்குப்பெரியார் சிறியார் என்ற பாகுபாடு இல்லை. ஸ்தூல ஸூக்ஷ்ம உலகை ஆட்டுவிக்கும் இறைவனதாணை எல்லாரையும் ஒருபடித்தாகவே தான் பிணிக்கும். இருளும், ஒளியும், ஈரமும் வறட்சியும் ஒன்றிற்கொன்று விரோதமா யிருப்பதுபோல, ஒன்றின்வரவு வேறொன்றின் அழிவிற்குக் காரணமாயிருத்தல்போல, அசுத்த வாழ்க்கையும் கடவுளறிவிற்கு விரோதமாயிருக்கின்றது. மனத்தானும் சரீரத்தானும் கொடுமை வாய்ந்த ஒருவன் ஒழுக்கச் சீர்திருத்தமின்றி உயரிய மெய்ஞ்ஞானப்பேற்றை அடைந்துளான் என்று கூறப்படின், நான் அக்கூற்றினை நம்பாது அத்தகைய மெய்ஞ் ஞானப்பேற்றை ஒரு கற்பனை வாய்ந்த பொய்யென்றே கருதுவேன். பரிசுத்தத்தை விளக்குகின்றனவான பல நாமங்களையுடைய கடவுள் யார் உயர்ந்த பரிசுத்த நெறியைப் பின்பற்றுகின்றார்களோ அவர்களையே தம்முடன் ஐக்கியப்படுவதற்கு உரியவராக்குகிறார். ஆதலின், என்றுந் தூயராய் திருவருளொளி பெற்றாரே நமக்கு ஞானசாரியரா யமைதற்குரியராவர்.

அத்தகையோர்களது வாழ்க்கையின் புனிதத் தன்மையானது அவர்களது குணங்களின் குறிகளினு லும், சாதாரண மானிடர்களது பாப வாழ்க்கையின் வேற்றுமையினுலும் வெளிப்பட்டு நமது நோக்கத்தை அவர்கள்பாற் செலுத்தவும், நம் புகழுரைகளைச் சாற்றவும் செய்கிறது. ஒரு தாவர ராசியின் உயிர்த் தன்மை எவ்வாறு மேன்மேலும் கிளைத்தெழுந்து புதுத்தளிர், அரும்பு, மலர், காய், கனி எனச் செழித்து விளங்குகின்றதோ அவ்வாறே குருநாதரின் முக்தி முளைப்பேறும் பல்வேறு ஒளி பொருந்திய நற்குணங் களாய் விகசிக்கின்றது: எப்பொழுதும் அல்லது அடிக் கடி இறைவனது சல்லாபத்தைப் பெற்றுள்ள குரு நாதரது ஞான வைராக்கியம் நிரம்பி முதிர்ச்சியடை யும் ஞானவாழ்க்கை பரிபூரண நிலை யுறுகின்றது. அது காரணமாய் ஞானக்குறைபாடும், கேடும், அவற் றின் வெளிச்சின்னங்களாகிய குற்றங்களுமில்லாது காணப்படுகின்றது. மற்றும், அவர்தம் ஆன்மாவிற் பொங்கி யெழும் ஞான எழுச்சியினைப் புலப்படுத்தும் நற்குணங்கள் வெளிப்படுகின்றன. அவர் இறைவனுள் வசிக்கிறார். மாறுத சத்துவ குணமயமாகிறார்.

உண்மையானது நல்லொழுக்கத்திற்கு அடிப் படையான தர்மமாகையால், ஞானசிரியராக நம்மிடம் வருவோர் பொய் பேசுதல் கூடாது. உண்மை நெறி யில் ஒழுகும் மனிதனியற்கையில் பொய் ஒருபொழுது மிராது. ஞானசிரியரின் வாழ்க்கை மாசற்ற மெய்ம்மை பொருந்திப் பொலிவுறல் வேண்டும்.

ஒரு ஞானசிரியருக் குரித்தாய குணங்களுள் வாய்மை என்பதனைத் தலைப்படுங் குணமாய்க் கூறி

யது சிலருக்கு அதிசயமாய்த் தோன்றும். பொய்யுடையொருவன் நன்னெறிக்கண் ஒழுகான் என்பதும், மேலும் அவன் ஞானசிரியனாதற் குரியனல்லன் என்பதும் யாவர்க்கு முடன்பாடேயெனினும், தினசரிவாழ்க்கையில் நாம் சந்தேகிக்கத்தகாத பெருமை வாய்ந்த மதாசாரியர் பலரும் பொய்யைப் பொறுத்தும் தண்டியாது விடுத்தும் வருவதனை யாம் கண்கூடாகக் காண்கிறோம். பொதுஜன அறிவினால் மதிப்பிடுமிடத்து, மதப்பற்று இல்லாதவர் எனக் கூறவொண்ணாது மற்றும் பக்தியுடையார் என்று புகழ் பெற்ற மாந்தரால் திருத்தொண்டு பூண்டொழுகும் அடியார்கள் முதலாய பெரியார்களைப்பற்றி உயர்வு நவிற்சியும் பொய்யும் புனைந்த கதைகள் வழக்கில் காணப்படவில்லையா? மெய்ப்புகழ் படைத்தாரைப் போற்றித் துதித்தற்கேயெனினும் பொய் எத்தன்மைத்தாயினும் புறக்கணித்தற்பாலதே என்பதை இவர்கள் உணருகின்றார்களா? அநேக போலிப் பக்தர்கள் மகாத்மாக்களைப்பற்றிய உயர்வு நவிற்சியின்பாற்படும் கதைகளைக் கட்டி விடுவதுடன் தங்களது சொந்த ஞானத் திறமையைப்பற்றியும் பல்வேறு கட்டுக் கதைகளை நிரப்பியும் விடுகின்றனர். உதாரணமாக, மனிதர்களால் போகமுடியாத மலைப்பிரதேசங்களுக்குத் தாங்கள் சென்று வந்ததாகவும், சாதாரணமாகக் கிடைக்கக்கூடாத மகான்களைக் கண்டதாகவும், அப்பெரியார்கள் இவர்கள் முன்பு அநேக ஜாலங்களைச் செய்து முடித்தோ அல்லது தங்களுக்கு ஆராவமுதை அருள் சுரந்தளித்ததாகவும், தேவர்களையும் பெரிய மகான்களையும் கண்டதாகவும்

அவர்கள் இவருக்குத் தனியாகக் கிருபை செய்ததாகவும் சாமானிய நிலையைக் கடந்த ஞான நிலைக்குரிய நிலையைத் தாங்கள் உணர்ந்ததாகவும், இன்னும் இவை போன்ற கதைகளையுங் கட்டிவிடுகின்றார்கள். இப்பொய்க் கதைகளெல்லாம் மாந்தர்களுக்கு நன்மை பயக்குமென்றும், அவர்களை உயர்ந்த வாழ்விலும் கடவுள் பக்தியிலும் செலுத்தும் என்றும் நம்பி இவ்வாறு கதைகள் புனைகின்றார்கள் போலும்! ஆகையினாலே அப்பொய்கள் மன்னிக்கத் தக்கவைகளாவதுடன், கொள்ளற்பாலனவென்று கருதுகின்றனர். ஏனெனில், அப்பொய்களைச் சொல்லும் நோக்கம் நல்லதாயிருப்பதால் அப்பொய்கள் தீதற்றவைகள் என்றும், அப்பொய்களினியற்கை ஆசங்கித்தற்பாலவையா யிருப்பினும், அவைகளின் முடிவு நன்னோக்கத்திற்காக விருப்பதால் அதை யடையும் வழியும் அவ்வாறே யிருக்குமென்கிறார்கள்.

இத்தகைய மாந்தர் கொள்கைக் கேற்பப் பல குருமார்களும் தங்கள் மாணவர்களுக்குக் கடவுளிடமும் ஞான மார்க்கத்திலும் நம்பிக்கை யுண்டாகும்பொருட்டு உயர்வு நவிற்சியானும் பொய்க் கூற்றானும் போதிக்கப் புகுகின்றனர். இப்பொய்ம்மை எவ்வளவோ பொறுக்கற்பாலதேன ஒருவன் கருதினும், பொறுக்கொணாப் பாவம் இதனை ஒட்டி ஒருபடி தாழ்ந்துளது. இத்தகைய பொய்யினின்று ஒரு சிறிது உயரவிலகின் அது தற்புகழ்ச்சி அல்லது ஊதியப் பேறு அடையப் புகுத்தும். இம்மாதிரியான தப்பு முறையைக் கொண்டிருக்கும் ஆசாரியர்கள் தங்களிடம் ஆன்ம உயர்ச்சி யிருப்ப

தாகப் பாவித்துக் கொள்ளின் தங்கள் சீடர்கள் அதைக் கண்டு நன்மை எய்தார்களா என்று தங்களுக் குள்ளேயே வாதிக்கின்றனர். அத்தகைய குருமார் களது மகத்துவத்தைச் சீடர்கள் நம்பி மனக் கோட் டை கட்டிக் களிக்கலாம். இது அவர்களது ஞான முன் னேற்றத்திற்கு இடையூறாகவிராது. அதற்குப் பதி லாக நன்மையே யுண்டாகலாம். ஊதியங்கருதிப் பொய் கூறுவதனை ஆதரிக்க ஒரு சிறிதும் நியாயமில்லையெனத் தோன்றினும், சற்காரியங்களில் செலவிடுவதற்காகப் பொருள் முதலானவற்றைத் தேடுதலில் குருமார்கள் நாட்டங்கொள்ளல் வேண்டுமென்று வாதிக்கும் குரு மார்கள் உளர். இவ்வகையான உன்னத ஒழுக்க நிலை யினின்றும் இழிந்து இழிதகு பொய்யினுக்கும் புரட் டுக்கும் ஆளாகித் தாழ்ந்தோ ரனேகர்.

அறிவாளியானவன் பொய் பேசுவதும், போலித் தனமாக நடிப்பதும், மனிதனுக்கு நலத்தைக் கொடா தென்பதை எளிதில் அறிந்து கொள்ளுவான். தீமை என்றுவது நன்மை பயக்குமா? இருள் ஒளியினைத் தர வல்லதோ? பொய் பேசுவதாலும் போலியாக நடித்த லாலும் ஒரு ஞானசிரியன் தனது இயற்கையை மாசு படச் செய்து கொள்வதுடன் தனது ஞான சக்தியை யும் குறைத்துக்கொள்கிறன். மாசுள்ளவனும் வலி யற்றவனும் வேருெருவனைப் பரிசுத்தனுகவும் வலி யுள்ளவனுகவும் செய்யமுடியுமா? ஒரு குருவின் ஒழுக்க மானது சீடனை நன்னெறிக்க ணுய்த்தற்காகச் சொல் லும் உபதேச மொழிகளைவிடப் பலனுள்ளது. ஒரு உண்மைக்குரு தமது உபதேசங்களைத் தமது சீடர்

களுக்கு உபதேசிக்கு முன்பு, தம் உபதேச நெறியில் தாமே நின்று அதற்குத்தக ஒழுகுகிறார். அவர் உண்மையை மிகவும் விரும்பி, அதைக் கௌரவித்துப்போற்றிப் புனைவார். எந்த சாக்கைச் சொல்லியாயினும் உண்மையைப் போற்றுதலினின்றும் விலகமாட்டார்.

உண்மை ஞானாசிரியர் குணங்களுள் இதற்கடுத்தபடி தலைசிறந்து விளங்குவது தன்னை யாண்டு அடக்கல்.

ஒவ்வொரு குருவும் தான் நடந்து சென்ற வழியில் பிறரை வழிகூட்டிச் செல்வதற்கு ஏற்றவாறு தான் சிஷ்ய நிலையில் அமர்ந்து பழகி இருக்கவேண்டும். சிஷ்ய பாவப் பழக்கமாவது தன்னை யாண்டு அடக்கிய வாழ்க்கையே யாகும்.

சிஷ்ய தர்மமாவது எல்லாப் பொறிகளையுங் காத்து அவற்றுள் யாதானுமொன்றினாலும் மயங்காவண்ணம் ஜாக்கிரதையாய் வாழ்வதாகும். ஒருசீடனானவன் காமம், கோபம், மோகம், குரோதம், பொறாமை இன்னுமிவை போன்ற தீய குணங்கள் உண்டாகுங் காலங்களிலேயே அவைகளை நசுக்கி விடுவான். ஒரு கணமேனும் பொறி வலைப்பட்டு மயக்குறின், அதற்காகக் கழிவிரக்கங் கொண்டு தன் சோர்வினைக் குறித்து விரதங் கிடப்பான். மேலும் சிஷ்யன் சுகத்தினை நாடான். இந்திரிய சேஷ்டைகளுக் கனுகுணமான காம வாழ்க்கையினைக் கட்டுடன் களைவான். கடவுளிடமும், தனது குருவினிடமும் அன்புமிகும் பொருட்டு நல்லொழுக்கம் விருத்தி யாவதற்காகக் கஷ்ட வாழ்க்கையை விரும்புவான். கடவுளறிவு தன் மனதில் நிரந்தரமாய்க் குடிகொள்ளும்படிச் செய்து கொள்வான்.

நாளடைவில் தன்னை மறந்து அவ்வறிவில் ஈடுபடும் பேற்றைப் பெறப் பழகுகின்றான். உயரிய வாழ்க்கையை விரும்பி இவ்வுலக வாழ்க்கையின் மாயையைக் கொஞ்சம் கொஞ்சமாக விலக்குவான். பொறியடக்கம் என்பதைப் பூரணமாக அடைந்து தனது இயற்கைக் குணம் மாறி, புலன் யாவும் வசமாகும் வரையில் விடா முயற்சியுடன் உழைப்பான்.

சிஷ்ய பதவியில் அமர்ந்து சிஷ்யருக்கு வேண்டிய தன்னை யடக்கி யாண்டு வெல்லும் பல்வேறு முறைகளிற் பயின்றதன் பயனுயே குருவினுக்குப் "பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க நெறி நிற்கு"ந் திறன்பெறல் அருங்குணமாய் விளங்குகின்றது. தன்னை யாண்டு அடக்குந்திறனில் குறைபட்டோனும் தன் ஞானேந்திரிய கர்மேந்திரிய சேஷ்டைகளை அறுத்தொழிக்க அறியாதானும், பொறிகட்கு அடிமையாகித் தன்னை விடுவித்துக் கொள்வதற்கே பிறருதவியை வேண்டுவோனும் ஞானசாரியராதற்குரிய உயர் நிலையையடையான். அத்தகையோன் தான் குருவாக வருவதற்கு விரும்புமுன்பு சிஷ்யனகப் பயிலவேண்டும்.

உலகத்தின் போகப்பொருள்களிடம் ஆசையற்று இருப்பது ஞானசாரியன் மற்றொரு உயர்ந்த குணமாகும். பொருள்களிடத்தும், உயர் பதவிகளிடத்தும், கௌரவத்திலும், ஜனங்கள் தம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொள்ளுதலிலும் அவருக்கு மோகமிராது. கடவுள் ஐக்கியத்திலேயே ஈடுபட்டிருப்பதால் அவரது மனோதிருஷ்டி கடவுளிடமும், தியான வாழ்க்கையினிடமும் நாடியிருக்கும். மன்னு உலகத்து

மகிழ்ச்சியை ஊட்டும் பொருள்களை அவர் எய்தினும் எய்தலாம். அளவறிந்து அவற்றினை ஏற்று அவர் நுகரினும் நுகரலாம். எனினும் அந்நுகர்ச்சியில் ஈடு பட்டு மதிமயங்கார். இவ்வுலகின் போகப் பொருள் களின்மீதுள்ள பற்று மனதில் அற்றால்தான், உய ரிய வாழ்க்கையில் அன்பு பூர்ணமாக ஏற்படக்கூடும். ஒருஞானாசிரியரின் மனம் அன்பில் தோய்ந்துகிடக்கும் எனின், உலகப்பற்றினை அவ்வுள்ளம் எங்ஙனம் பற்ற இயலும்? "அகலாதணுகாது தீக்காய்வார்போல" ஞானாசாரியரும் உலகினை ஒட்டியும் ஒட்டாதும் வாழுஞ் சீரியராவர். தூயமெய் வாழ்வினையே அண்ணாந்து நோக் கும் முகாரவிந்தத்துடனும் அருளொளி தேஜோ மய மாய் ஜ்வலிக்கும் நேத்திரங்களுடனும், மக்கள் வாழ்க் கை பெறும் பேற்றினைக் கண்டு களிக்குமாறு மக்கட் டொகுதியினைக் கையது காட்டியே கூப்பிட்டழைப் பர். அகங்கார மமகாரங்களை வேருடன் களைந்து ளார். ஆதலால், சிஷ்யர்கள் தமது உபதேசமொழி களுக்கு ஏற்ப, ஒழுகித் தங்கள் நலத்தினைத் தாமே தேடிக்கொள்வதைத் தவிர வேறொரு கைம்மாறும் அவர் சிஷ்யரிடம் வேண்டுவதில்லை. தம் திருவுள்ளத் தெழும் தேவகீத வொலியையே அவர் கேட்டு ஆனந் தித்திருத்தலால் மக்கள் தம் புகழ்ச்சியினை வாய்விட்டு மட்டில்லாது அளப்பினும் அதைக்கேட்டுக் களிப்புறும் விருப்பும், பற்றுள்ளமும் அவரிடத்திலில்லை. பொறிப் போர் வெற்றியும் ஈசனிடம் பற்றும் அவருக்குத் திருப்தியை யூட்டலால் செல்வாக்கென்பது அவர் சிந்தையிற் புகுவதில்லை. செல்வம், உயர்பதவி, இன்

னும் இவைபோன்ற உலக போகங்கள் அவருக்கு வரலாம். ஆயினும் அவைகளைக் கண்டு சந்தோஷமுறார். வெறுத்துத் தள்ளினும் தள்ளுவர். அல்லது அவற்றை ஜீவர்களுக்கு உபயோகிக்கும் பொருட்டுத் தம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு வைப்பாகக் கொள்ளினுங் கொள்வர். ஆதலால் மன அமைதியை அவர் ஒரு நாளும் இழப்பதில்லை. உலக மோகங்களினின்றும் பொறியொடுக்கம் செய்வதிலேயே கருத்தாக விருப்பார்.

ஞானசாரியர் யாவரிடத்தும் தயையுள்ளவராக விருப்பார். அவரது மனம் எப்பொழுதும் அகண்டத்திலேயே லயித்திருப்பதால் அவரது தயைக்கு எல்லை கிடையாது. அத்தயையானது எல்வருணத்தாரையும் தன்னுள்ளடக்கிக் கொள்கின்றது. மஹா பாவிகளும் அவரது அன்பிற்கும் பச்சாதாபத்திற்கும் உரியவராகின்றார்கள். நுண்ணிய வேறுபாடுகளையும் முரணிய கொள்கைகளையும் உண்டுபண்ணுவது உலக வியல்பின் உவப்பாகும். அது முற்றிலும் சுய நல வடிவினையே கொண்டதாகும். ஆனால் ஞானப்போக்கு ஒற்றுமைப்படுத்தி எல்லாவற்றையும் ஒன்று கூட்டும். அன்னியோன்னியத்தையும், அன்பையும் ஆக்கிப் பெருக்குவதில் ஞானத்தினுக்கு ஆனந்தமதிகம். அது முற்றிலும் அருள்மயமானதே. மெய்க்குரு ஞான பரிபூரணராயிருத்தலான் எளியார், பிழைபோனர், முதலாயோர் மாட்டும் அருளுடையராயிருப்பர். மாயையின் மயக்கத்தை அனுபவத்தில் அவர் கண்டுணர்ந்துளாராதலால் அதனை அதிக முயற்சியால் அமுக்கி ஆழ்த்தி

யுள்ளார். ஆகவே மாயவலையிற் சிக்குண்டு நிலைகுலைந் தாரையும் இகழாது பொறுப்பர். அன்னார்களது தீ முறைகளை மன்னிக்காவிடினும், தம் கருணையின் மிகுதி யால் அவர்களை நன்னெறியிற் செலுத்தப் பிரயத்த னப்படுவார். அன்பின் சக்தியை நன்கறிவார். பாபத் தின் சக்தியினால் மனிதர்களிடம் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தை எழுப்புவது 'அன்பு' என்பதை அவர் நன்கு அறிவார். ஆதலால் யாதொரு பேதமுமின்றி எல்லோர் மாட்டும் ஒரு படித்தாய் அன்பு செலுத்து கின்றனர்.

எனினும், அவரது கருணை மனோ விகாரத்தான் ஆயதன்று. அவரது இரக்கம், எம்முறைப் பயிற்சிக் கும் கட்டுப்படாத கடினமனமுள்ள மனிதர்களை வசஞ் செய்ய வியலாத எளிமையும், மிருதுத் தன்மையு முடைய பெண் தன்மையான இரக்கமன்று. கபடனையும் கடுமூர்க்கனையும் வேண்டியவிடத்துத் தக்கவாறு சில சந்தர்ப்பங்களில் தண்டித்துப் பலருமறியுமாறு அவர் தம் இழிசெயலைப் பகிரங்கப்படுத்தவும், போதுமான மனவன்மையும் அவர் மாட்டுண்டு. ஆனால் குருநாதர் இவ்வாறு செய்வதெல்லாம் அன்பாலாவதே யன்றிக் குரோதத்தா லாவதன்று.

எல்லாரையும் அவர் அருளால் ஆள்வது உண் மையே யெனினும் அவர் அருள் மிகுந்திருத்தலால், உலகப்பற்றுடையோரும், தீநெறிப்பட்டோரும் அவ ரை வஞ்சித்தல் கூடுமென்றும் தங்கள் மனோபீஷ்டத் திற்கேற்ப அவரைத் திருப்பிக் காரியங்களை நடத்த இயலுமென்றும் எண்ணுதல் பொருந்தாது. இறை

வனது திருவருள் நிரம்பியிருத்தலால், அவர் மனம் பெருமையுடையது. ஆதலால் உலகப்பற்றுடையோரும் தீ நெறிப்பட்டோரும் அவர் மனதை ஆள இயலாது. முடியுமாயின் அவர் மனதிற் கேற்ப இணங்கலாம். அல்லது பிணங்கி அதன் வசப்படாதோடித் தப்பித்துக் கொள்ளலாம். ஆதலால் மெய்ந்நெறிக்கண் ஒழுகும் குருநாதர் தம்முடைய அன்பு முதிர்ந்த அருளாலும் சீரிய கொள்கைகளை மேற்கொண் டொழுகலான் முதிர்ந்த அஞ்சாத்தன்மை வாய்ந்த மனவுறுதியானும் எல்லோர் மனதையும் வெல்கிறுர்.

மேலும், மெய்க்குருவானவர் ஆழ்ந்த ஞான திருஷ்டி உடையவர். துறவியுணரும் விசேடத்தான் அவர் மக்கட்டொகுதியின் எவ்வகையினர் மனதையும் ஆராய்ந்து காணவல்லர். அநேக விஷயங்களில், மனிதர்கள் ஒரே தன்மையை யுடையோர்களாயிருப்பினும், செய் தொழில் காரணமாய்ச் சுபாவ வேறுபாடுண் டென்று அவர் நன்குணர்வர். ஒவ்வொருவனுக்கும் மனோ விகற்பமுண்டு. அதாவது, ஞானக் கொள்கை விசேஷ மொவ்வொருவனுக்கு முண்டு. ஆதல் பற்றி ஒவ்வொருவனுக்கும் தனித்தனி சிகிச்சை முறைவேண் டும். தம் சீடர்களுக்கு ஞானோபதேசஞ் செய்யுங்கால் மேற் கண்ட மனோ தாரதம்மியத்தை நன்கு மனத் துளமைப்பர். அஃதின்றேல், அவர்களை க்ஷேமம் அடையுமாறு இயற்ற வொண்ணு தென்பதனை அறிவர். அறிவும் அனுபவ முதிர்ச்சியுமுடைய வைத்திய னொருவன் எவ்வாறு நோயாளியின் உடற் பாங்கை நன்கு தெளிந்து அதற்கேற்ப, தக்க ஔஷதத்தைத்

தருகின்ருனே அவ்வாறே மெய்யனுபவமுடைய ஞாஞசாரியனும் சீடன் மனப்பாங்கிற் கேற்ப, தக்க முறையான் உபதேசித்துக் குணப்படுத்த முயல்வன். பிணியைப் போக்கி ஆரோக்கியத்தை அமைத்தற்கு எவ்வாறு வைத்தியன் பொது முறைகளான் முயல் கின்ருனே அவ்வாறே ஞாஞசாரியனும் தன் சீடர்கள் எல்லோர்க்கு மாவதான சில போதனைகளைக் கொண் டுள்ளார். எனினும், ஒவ்வொரு சீடனின் மனநிலைக் கேற்ப, தனிப்பட்ட விசேஷ உபதேசங்களையும் கைக் கொண்டுள்ளார். இச்சிறப்புடைய போதனைகளே பெரும் பயனளிப்பனவாம். மதப்பற்றுடைய எல் லோர்க்கும் இறைவன் மாட்டும் பிரேமை உண்டு. அப் பிரேமை வாயிலான் இறைவனுடன் சேர அவாவுகின் றனர். உலக வாழ்க்கையை ஒட்டியுள்ள சிந்தையையும் மொழியையும் பக்தியால் மாற்றுமிடத்து இறைவனு டன் நெருங்கி உறவாடற்காய அவா ஒருவாறு திருப்தி யடையும். ஆதலால், கடவுளைக் காணுமிடத்தும் அப் பரம் பொருளைத் தந்தை யென்றும், தாயென்றும், நாதனென்றும், தோழனென்றும், நாயகனென்றும், கருதி அதற்கேற்ப அன்பு ஆனந்த மொழிகளால் அழைக்கின்றனர். இக்காலங்களில் கடவுளின் அரு காமையிலிருப்பதாக அவர்கள் உணருகிருர்கள். இக் காரணத்தைக் கொண்டுதான், நம் நாட்டுத் தலை சிறந்த குருமார்கள் மக்கள் மனத்துள் யாண்டும் பொங்கி யெ ழும் மனவெழுச்சியைப் பொருளாகக்கொண்டு இறை வனை மேற்கூறிய ஐவகைகளுள் ஒன்றுல்அபிமானித்தல் வேண்டும் எனக்கூறுநிற்பர். அவை தாம் மகன் தந்தை

யையும் தாயையும் போற்றுதல், அல்லது பணிக்கடன் பூண்ட சேவகன் தன் எஜமானனை விசுவாசித்தல், அல்லது அருமை மகனைத் தந்தை அன்போடு பாராட்டல், அல்லது ஆருயிர்த் தோழனை நண்பன் ஆதரித்தல், அல்லது குலமகள் கொழுநனைக் காதலித்தல் ஆம். இப் பேராசிரியர்கள் கொள்கைக் கேற்ப மக்கட் காதல் ஆற்றொழுக்குடைத்தாய் பக்தன் இதயத்தினின்று மேற்கூறிய முறைகளான் இறைவனது அடியிணையை நோக்கிச் செல்லலாம்.

இனி, பக்தி சம்பந்தமாய் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு பற்று விசேஷம் உண்டு. ஒருவன் இறைவனைத் தந்தையாகக் கொண்டு ஆர்வ முறலாம். மற்றொருவன் கடவுளை ஆண்டானைக் கொண்டு சேவை புரியலாம். வேறு சிலர் வேறு வகைகளான் நேசித்தல் கூடும். ஒவ்வொரு மனிதனது இயற்கைக் குணமும் அவனை ஏதாவதொரு பக்தித் தன்மையிற் செலுத்துகின்றது. சீடர்களது விருப்பத்தையும் தன்மையையும் தெரிந்துகொண்டு அவரவர்களுக்குத் தகுந்தாற் போன்று உபதேசிப்பது ஞானசிரியரின் கடமையாகும்.

மேலும் மக்களுள் ஒரு சிலர் ஆத்ம ஞானப்பற்றும் துறவறப்பற்றும் உடையவராய் இருக்கலாம்; வேறு சிலர் இறைவன் மக்கட்டொகுதி ஆய இவர்கட்குத் தொண்டு புரிதலில் பற்றுடையராயிருக்கலாம்; வேறு சிலர் நற்குண நற்செயல்களைப் பெருக்குவதில் நோக்குடையவராயிருக்கலாம்; வேறு சிலர் நிஷ்டையிலமர்ந்து மெய்ம்மறந்த நிலையில் இறைவனோடு கலக்க

விரும்பலாம். தம் சீடர்களுக்கு இயல்பாய் அமைந்துள இப்பற்று விசேடங்களைச் சிறந்த ஞானசாரியர் புறக்கணியாது இவற்றை அவர்தம் ஞானப்பேற்றுக்கு அடிப்படையாக அமைத்துக் கோடல் வேண்டும். இவற்றையெல்லாம் நன்கு தெளிந்து சீடர்களுக்கு ஏற்றவாறு உபதேசிக்கப் புகுதல் நேரிதாகும்.

மேலும், ஓர் உண்மை ஞானசாரியர், தாமும் தமது சீடர்களும் வசிக்கும் தேசம், காலம், சந்தர்ப்பம் முதலியவைகளை நன்கு யோசித்தறிந்து கொள்வார். பண்டைக் காலத்தில் ஞான சாதகம் பெற விரும்புவோர்களுக்கு உதவியாகச் சில விதிகள் ஏற்பட்டன. ஆனால் தற்காலத்திய மனிதர்களால் அவ்விதிகள் பூராகவும் அனுசரித்தல் முடியாது. இவ்வுலகம் மாறிவிட்டது. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. தற்கால வாழ்க்கைப் போராட்டத்தில் அப்பண்டைய விதிகளினின்றும் நழுவ வேண்டியது அவசியமாக ஏற்பட்டுவிடினும், ஒரு புள்ளி அளவும் பிறழக் கூடாதென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றார்கள். அவர்கள், "பண்டைய விதிகளைக் கடப்பதினும் பாழுடலைத் துறப்பதே மேல்" எனப் பிடிவாதமாய்ச் சற்றும் இணங்கா வன்மையுடன் சாதிப்பர். ஆனால் உண்மையான ஞானசிரியர் சொத்தையான சட்டங்களையோ வழக்கங்களையோ வழிபடுபவரல்ல. அவரது பரந்த மனோ திருஷ்டியானது காலத்தின் தேவையையும் இன்னும் இதர விஷயங்களையும் அனுசரித்ததாயிருக்கும். ஆகையால், சட்டங்களில், அவசியமான மாறுதல்களைச் செய்வதில்

தவறொன்றையும் காணார். தமது ஆழ்ந்த அறிவினால் இச் சட்டங்களின் அடிப்படையான நோக்கங்களை யறிந்து அவற்றைக் கொள்ளத் தலைப்படுவாரேயன்றி, அச்சட்டங்களின் வெளித்தோற்றங்களைப் போற்றார். ஞான வாழ்க்கையின் முதிர்ச்சி அவரிட மிருப்பதால் எப்பொழுதும் முன்னேற்றம் அடைந்து கொண்டே யிருப்பார். விருத்தியடையும் தமது ஆன்ம சக்தியை யும் தமது சிஷர்களுக்கு ஊட்டுவார். முறையாக, நன் மையினின்று நன்மையினையும், வன்மையினின்று வன் மையினையும் எய்திக் கடைசியாக ஞான பரிபூரணத்தை யும் குருநாதரின் உபதேசத்தான் பெற்றுப் பெருகு கின்றனர்.

அவர் எப்பொழுதும் தேர்ச்சி யடைவதால் காலத் திற்கேற்ற மாறுதல்களையும் விரும்புவார். சாஸ்திரங் களை அறியாமையினால் அவர் அவ்வாறு விரும்புகின்றா ரில்லை. அல்லது அறிவீனத்தினாலும் முறட்டுத்தனத் தினாலும் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் சட் டங்களை மீறுவோரின் சொல்லைக் கேட்பதினாலுமன்று. ஆனால் அவர் சட்டங்களின் உண்மையான கருத்துக் களால் நிரம்பி யிருப்பதினாலே யாகும். சாதாரண முறைகளால் கற்காவிடினும், சாஸ்திர பாண்டித்திய முடைய உண்மையான சுரோத்திரியர் அவரே. சிலர் க்கு இவ்வுயரிய மெய்ஞ்ஞானம் கற்றலால் அமையும்; மற்றுஞ் சிலர்க்கு இவற்றைக் கற்றோர் பிரசங்க வாயி லான் அதாவது கேள்வியான் அமைவதாகும்; வேறு சிலர்க்கு மனோ தர்மமெனப்படும் இயற்கை நுண் ணுணர்ச்சியால் அமைவதாகும். தவிஸிஜ்ஞாதெ

ஸவ-ம் விஜ்ஞாதம் ஹவதி ॥ " இறைவனை அறிதலான் எல்லாவற்றையும் அறிகிறான்." ஒரு மனிதன் கடவுள் சாந்நித்தியத்தை அடைந்து சாஸ்திரங்களில் கூறிய பக்குவ வாழ்க்கையையே நடாத்துவான். எப்பொழுதும் கடவுளறிவிலேயே ஆழ்ந்திருப்பதினால் தமது சொற்களினாலும் உதாரணங்களாலும் சாஸ்திரங்களிற் கூறியதையே வெளியிடுகிறார். ஆகையால், அவர் எந்த முறையாக ஞானத்தை அடைந்திருந்தபோதிலும் அவர் மனமானது சாஸ்திரங்களின் கருத்திலும் ஞானத்திலும் பதிந்தே கிடக்கும். இத்தகைய மெய்ஞ்ஞானம் பெற்றிருத்தலான் மாறுங்கால நிலைக்கு ஏற்ப, சாஸ்திர உட்கருத்துக்களைப் போற்றிப் பாதுகாக்க நன்கறிவர்.

இனி உண்மைக்கு நேரானதனோடு கலந்து மயங்கார். மருட்சியைத் தோற்றுவிக்கும் சந்தர்ப்பங்களுக்கிடையிலும் அவற்றின் பாகுபாட்டை நன்குணர்ந்தறியும் ஆற்றல் வாய்ந்தது அவர்தம் மனச்சாக்ஷி. சாதாரண மனிதர்களோ சிக்கலான சந்தர்ப்பங்களில் உண்மை நெறி எதுவென்றும் யாது செய்வதென்றும் அறியாது, சந்தேகத்தினால் தயங்குவார்கள். ஆனால் ஒரு உண்மை ஆசானது நிர்ணயங்கள் சந்தேக விபரீதங்களினால் மலைவுறாது. சந்தேகமும் குழப்பமும் மிகுந்த காலங்களில், மின்னலைப் போன்று ஞான விளக்கம் உண்டாகும். உடனே நியாயம் புலப்படும். ஆகையால் மானிடர்கள் தங்களது கடமைகளை யறிந்து கொள்ளும் பொருட்டும், அந்தக் காரணத்தைத் தெளிவுபடச் செய்யவும், மாறிவரும் காலதேச வர்த்தமானத்

திற்கேற்ப நியாயமான முடிவிற்கு வரும் முறையைத் தெரிந்துகொள்ளுதற் பொருட்டும் அவரை நாடுகின்றார்கள். மனிதர்களை நியாயமான மார்க்கத்திற் செலுத்துவதற்காகவும் நெறி தப்பிச் செல்வோர்களைச் சரியான வழிகளிற் சேர்ப்பதற்காகவும், குன்றின் மேலிட்ட தீபம்போல ஞானசிரியர் விளங்குகிறார்.

குருநாதரின் கூட்டுறவு கைகூடியவிடத்து ஆண், பெண்பாலர்களும் தம்மை அறியாமலே மேன்மேலும் பொங்கியெழும் மனவெழுச்சியான் அவரை அன்புடனும் ஆதாத்துடனும் போற்றித் துதிப்பர். இப்படி ஏற்படுவதற்குக் காரணம் ஏதோ சில தந்திரங்களினால் தம்மைப் புகழும்படியாகச் செய்து கொண்டதனாலன்று. ஆனால், ஒருவருக்கும் அவரால் தீமை நேரிடாதிருக்கிறபடியாலும் எல்லோரிடமும் அன்பு கொண்டிருப்பதாலும் யாவருக்கும் மூலமாகவுள்ள கடவுளிலேயே அவர் எப்பொழுதும் ஆழ்ந்து காலங் கடத்துவதாலும் இவ்வாறு ஏற்படுகின்றது.

கடவுள், தன்னுள்ளும் எல்லோரிடத்தும் இருப்பதை அறிந்த உண்மை ஞானசிரியர் எப்பொழுதும் கடவுள் ஐக்கியத்திலேயே காலத்தைக் கழிக்கின்றார். இவரது கடவுளைக்கிய வாழ்க்கையானது வெளியில் ஆச்சரியகரமாய்த் தோற்றுவதால், எவரெவர் கடவுளிடமும் நீதி வாழ்க்கையிடமும் இச்சையுற்றிருக்கின்றார்களோ, அவர்கள் யாவரும் இவரிடம் இழுக்கப்படுகின்றார்கள். பக்திமான்கள் இவரது சங்கத்திற் பிரியங்கொண்டு இவருடன் செய்யும் சம்பாஷணைகளின் மூலமாக ஞானவேசம் பெறுகின்றார்கள். உலகப்பற்

றுடையோரும், உலக விவகாரங்களிலேயே ஈடுபட்டி ருப்போரும் இவரைச் சந்திக்க நேர்ந்தபொழுதே பக்தி வாழ்க்கையிற் பரவசமுடையோராய்க் கடவுளையும், கட வுள் வாழ்க்கையைப்பற்றியும் ஞானசிரியர் சொல்லக் கேட்டு ஏதோ ஓர் புதிய உலகத்தினை அடைந்துவிட் டதுபோன்றும், இதுவரை என்றும் அனுபவித்திராத ஆனந்தானுபவங்களைத் தாங்கள் இப்பொழுதுபுதிதாய் அனுபவிக்கும் ஓர் நவீன வாழ்வினை அடைந்துவிட்ட தாகவும் கருதுவர். மெய்ப்பேற்றினைப் பெற்ற உண் மை ஞானசாரியரது அரிய நுண்ணிய ஆற்றல் இத்த கைத்தாகும். எவ்வாறு ஒரு பெரிய மின்சாரக் காந் தம் தன்னிடம் வரும் இரும்புப் பொருள்களை யெல் லாம் இழுத்துக் கொள்ளுகின்றதோ அதே போன்று ஒரு ஞானசாரியனும் தம்மிடம் வருவோர்களை யெல் லாம் மயக்கி ஞானவேசத்தை அவர்கள்பால் உண்டு பண்ணுகிறார்.

குரு என்ற பதத்திற்கு ['கு' என்றால் அஞ் ஞானம், 'ரு' என்றால் போக்குபவன்] அஞ்ஞானத் தைப் போக்கி ஞானத்தைக் கொடுப்பவர் என்பது பொருள். ஆகையால் உண்மையான நோக்கத்துடன் ஒரு ஞானசிரியனைச் சார்வோர்கள் அவரிட மிருந்து திரும்புங்கால் சிறிதாவது மெய்ஞ்ஞான ஒளியைப் பெறாது செல்லார்கள். வஞ்சகர்களேதான், குருவின் அருளை அடைவதில்லை. ஏனெனில், அவர்கள் குருவி னிடம் வரும்போது அகக்கண்ணை மூடிக்கொண்டிருப் பதால் திரும்பிச் செல்லும்போது கண் மூடிகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் அவரிடமிருந்து ஞான ஒளி

யைப்பெற விரும்புவதுமில்லை. அது அவர்கட்குக் கிட்டுவதுமில்லை. கோடை மழையும், நீர்புகா அங்கியை அணிந்துளோர் சரீரத்தில் எவ்வாறு படாதோ, அவ்வாறே குருநாதரின் உபதேசமொழியும் வஞ்சகத்தான் தங்கள் மனத்தை மூடியிட்டுக்காப்போர் இதயத்திற் படாது. தூய மனதுடன் அவரை அண்டினோர் பயனடையாது என்றும் சென்றதில்லை.

உண்மைக் குருவானவர் தமது தூர திருஷ்டியின் சக்தியினால் இனிவரப் போவதையும் அறிவார். மனித வர்க்கத்தாருக்கு நன்மையைப் பயப்பது யாதென அவருக்கு நன்கு புலப்படும். குருவின் உபதேசங்கள் நீடிய பயனைக் கொடுப்பனவாதலால், அவர் காலத்தி லுள்ளார்க்கு மட்டுமின்றிப் பிற்காலத்தவருக்கும் உபயோகப்படுகின்றன. என்றும் வற்றா வாய்மை ஊற்றினின்று தமது அறிவைப் பெறுகின்றபடியால், அவரது உபதேசங்கள் குறுகியவைகளாயும் ஒரு சார்பாகவுமில்லாமலிருக்கின்றன. அவரது உபதேசங்கள் ஏதோ சிலருக்கு மட்டும் உபயோகமாகி மற்றவர்களுக்கு உபயோகமில்லாது போகக் கூடியவைகளல்ல. அவை அவர் காலத்தோரை மட்டும் மேம்படுத்தி இனிப்பின் எழுவோர்க்குத் தளர்ச்சியையும் தாழ்வையும் தருவனவாகா. அவர் தம் விரிந்த நுண்ணறிவு மக்களுக்கு அறிவு அளிப்பதில் எக்காலத்திற்கும் நன்மையையே கருதி நிற்கும். அவரது உபதேசங்கள் உலக நன்மையை விருத்தி செய்யக் காரணமாயிருக்குமேயன்றி எத்தகைய தீங்கும் இழைக்காது. அவரது உபதேசங்கள் அங்கீகரிக்கப்பட்ட விடத்து ஒற்றுமை, சமா

தானம், அன்பு இவைகள் நிறைந்திருக்கும். அத்தகைய ஞானசிரியாது அறிவைப் போற்றித் தங்களது உண்மை நெறியைக் காட்டும் தீபமாகக் கொண்ட மாந்தர் தலைமுறை தலைமுறையாக ஆனந்த வாழ்க்கையை அடைவது திண்ணம்.

இவ்வித காரணங்களால், ஒரு உண்மை ஞானசிரியர் உலக முழுவதையும் ஆட்டுவிப்பர். அவரது உபதேசங்களினுல் உலகத்தில் உண்மையான நாகரீகம் பரவுகின்றது. அவர்தம் ஞான ஆட்சி அவர் இந்த ஸ்தூல உலகத்தினின்று மறைந்தவுடன் நின்றுவிடாது மனிதர்கள் தர்ம நெறியில் விருத்தி யடைவதற்காக, வெகு காலம் நிலைத்து நிற்கின்றது. அவரது சக்தியானது அவரது சீடர்களின் மூலமாகப் பிரதி பலிக்கும். சீடர்களோ, மனித சமூகத்தாரை முன்னேற்றுவதற்காகப் பல துறைகளிலும் உழைக்கின்றூர்கள். தங்கள் குருநாதரிடமிருந்து கற்றுத் தெளிந்த 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாள'ராம் பெருந்தன்மையையும் அளவிலா அன்பையும் சொல்லானும் செயலானும் பரப்புவர். இவ்விதம் ஒரு உண்மைக் குருவானவர் எண்ணிறந்த மக்கட்டலைமுறைகளுக்குத் தாமே நேரிலும் தமக்குப் பின்னர் தம் சிஷ்யர்கள் மூலமாயும் எல்லையற்ற நன்மையை யளிப்பர்.

ஒரு உண்மை ஆசானது சில குணங்களும் தன்மைகளும் இப்படிப்பட்டனவாம். கடவுளது பெருமையையும், புகழையும் வர்ணிக்க எவ்வாறு சொற்களினுலியலாதோ, அதே போன்று, கடவுளின் தோற்றமான குருவினது பெருமையையும் சொல்லி முடியாது. சிறி

னும் தன்னலமின்றி மானிடரிடத்து அளவு கடந்த கருணையுள்ள உண்மைக் குருவானவர் இவ்வுலகிலுள்ள பொன்னாலும் மணியாலும் வாங்கமுடியாத நலத்தை அளிக்கின்றனர்.

சிலர், மேற்சொன்ன யாவும், ஒரு உண்மை ஆசானின் இலட்சியங்களைக்குறிக்கும்வர்ணனை என்பார்கள். தினசரி வாழ்க்கையில் அத்தகைய குருவை நாம் காண்கின்றோமில்லை. சாதாரணமாகச் சிலர், ஆசான் என்ற பெயர் வைத்துக்கொண்டு நம்மிடம் வந்து நமது காதுகளில் சில மந்திரங்களை உபதேசிக்கவும், அவைகளைப் பின்பற்றினால் அவை நம்மை மோக்ஷத்திற் செலுத்துமென்றும் உறுதி செய்யத் தயாராயிருக்கின்றார்கள். அத்தகையோர்கள் அநேகமாக ஐம்பொறியை ஆண்டு அடக்கும் வன்மையும் பற்றறுத்த பெருமையும் அருள் நிறைவும் வாய்ந்தவரல்லர். வேண்டிய சீடர்களுக்கு உபதேசித்து அதன் மூலமாய் ஜீவனம் செய்வதே அவரது தொழிலாகும். நமக்கு ஞானம் கொடுக்க அவராலியலாது. நமது கஷ்டங்களையும் சந்தேகங்களையும் அவரால் அகற்ற முடியாது. அப்படியாயின் மேலே வருணித்து வந்த உண்மை ஆசானை எங்கு காண இயலும்?

ஒரு உண்மைக் குருவை நாடி, அவரது உதவியால், ஞான நெறியிற் முன்னேற்றமடைய மெய்யாக விரும்புவாயாகில், கடவுள் அளித்த அறிவினிற்கேற்ப தூய வாழ்க்கையைக் கைப்பற்றி மேன்மேலும் அருளொளி பெருகக் கடவுளை வேண்டுவாயாக. உண்மையும் ஆர்வமும் உள்ள ஓர் ஆன்மாவைக் கடவுள் காப்

பாற்றுது கைவிடார். அவ்வான்மா ஈடேறுவதற்குரிய சௌகரியத்தைத் தாமே செய்வார். அவசியமிருக்குங் காலத்தில், ஒரு உண்மை ஞானசிரியனையாவது அவனிடம் அனுப்புகிறார். அல்லது குருவைச் சந்திக்குமாறு சரியான இடத்திற்குச் சீடனையாவது செலுத்துகின்றார்.

ஞானமானது தீயோர்களின் தீச்செயலால் மழுங்கிப் போகும்பொழுதும், தீயோர் தீயவல்லமையானது தர்மங்களையும் நல்லவற்றையும் மீறி மேற் செல்லும் பொழுதும், மதம் சீர்கேடான நிலையிலிருத்தலால் தூய்மை மிக்கோரையும், உண்மையான மனிதர்களையும் உண்மையான ஆசான்களையும் காண்பதரிதா யிருக்கும்பொழுதும், மனிதர்கள் அழிந்து படுவதினின்றும் காப்பாற்ற, கடவுள் தாமே தமது எல்லையற்ற சக்தியுடனும் பெருமையுடனும் ஓர் மனித உருவாகத் தோற்றுகிறார். முத்திநெறிக்கண் எல்லாரையும் சேர்ப்பித்துச் சொல்லானும் செயலானும் எல்லாரையும் நல்வழிப்படுத்தும் ஓர் சிறந்த குருநாதரை அதிர்ஷ்ட வசத்தான் எல்லாரும் அடைகின்றனர்.

மக்கட் டொகுதிக்கு உத்தம வாழ்க்கையை உணர்த்த வேண்டித் தர்மஸ்வரூபம் எனக்கருதத்தக்க ஒரு புருஷோத்தமனை அவர்கள் கண்கூடாகக் கண்டறியுமாறு கடவுளே ஒரு அவதார புருஷனாகவும் ஞானசாரியராகவும் பெரிய மஹானாகவும் பன்முறையும் இம்மண்ணுலகில் அவதரிக்கின்றார் என்று ஹிந்து சாஸ்திரங்கள் கூறு நிற்கும். அறநெறிப்பட்டோரை ஆதரித்து அவர்கள் தர்மத்தைக் கைவிடாது காத்தற்

கான திடத்தையும் தைரியத்தையும் உவந்து அளிக்கவும், தீ நெறிப்பட்டோர்க்குப் பாபத்தைக்கொன்றழிக்கும் நற்போதனைகளை உபதேசித்து அது காரணமாய் அதர்மத்தை ஆண்டு அடக்கவும் அவர் தோன்றுகின்றார். மற்ற மதக்கிரந்தங்கள் வேறு விதமாய் இதேயுண்மையைக் கூறுவதாவது:—“கடவுள் தமக்குப் பிரியமானோர்களையும், கனம் பொருந்திய தொண்டர்களையும் தேவதூதர்களாக இவ்வுலகிற்கு அனுப்புகிறார்.” எவ்வாறு நோக்கினுஞ்சரி; கடவுளானவர் மானிடர்களை அந்தகாரத்தில் விட்டு விடாமல் அவர்கள் ஈடேறும் பொருட்டு அடிக்கடித் தமது பரமகிருபையால், அவர்கள் செல்லவேண்டிய நெறியை ஞானவிளக்கினால் காட்டுகிறார். முற்காலங்களில் கடவுள் ஸ்ரீராமன், கிருஷ்ணன், புத்தர், சங்கரர், நானக், சைதன்யர் முதலியோராக அவதரித்தது போன்று, இக்காலத்திலும் அவதரித்தார். என்றும் அவியாத ஞான ஒளிமய மனிதர்களிடமுள்ள எல்லை கடந்த அன்பினாலும் கருணையினாலும், தற்காலத்தில் யாவராலும் கொண்டாடப்படும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மூலமாகத் தோற்றச் செய்தார். அவரிடம் எல்லா நற்குணங்களும் பூரணமாக விருந்தன. மேன்மையான ஞானசிரியரிடமிருக்க வேண்டிய அநேக உயர்ந்த குணங்களும் அவரிடம் மல்கி யிருந்தன. அவருடைய ஜீவிய சரித்திரத்தையும் போதனைகளையும் படித்துக் கடவுளே மனிதராய் இப்பூவுலகில் அவதரித்த புண்ணிய காலத்தை யொட்டியே நாமும் பிறந்தானந்திக்கும் பாக்கியமடைந்தோமென்று களி கூறுங்கள்.

நமது நன்மைக்காக அவர் இவ்வுலகில் தோன்றி அமிர்தம் போன்ற உபதேசங்களைச் செய்தார். நாம் தியானம் செய்து உய்வதற்காக வருணிக்க முடியாத தமது கீர்த்திவாய்ந்த குணங்களை வெளிப்படுத்தினார். குருவைக்காண ஆவலுள்ளோராயின் முழுநம்பிக்கையுடன் அவரைப் போற்றுங்கள். இன்று நமது ஊனக் கண்ணிற்குப் புலப்படாவிடினும் அவர் என்றும்வசிக்கிறார். பயங்கொண்டஓர் குழந்தை தன்னைக்காப்பாற்றுமாறு தன் தந்தையை அணுகுவதுபோல அவரைச் சரணடைந்து "ஏ குருநாதா! நான் தங்கள் அடிமை! என்னை அஞ்ஞானத்தினின்றும் கரையேற்றி ஞானத்திற் சேர்ப்பாயாக! இவ்வுலக துன்பத்தி னின்றும் நீக்கி என்றும் மாரு இன்பம் அருள்வாயாக" என்று அவரை வேண்டுங்கள். அப்படிச் செய்யின் அவர் நும்மை நல்லாற்றுப்படுத்திக் கூட்டிச் சென்று பாபமோர் சிறிதும் நும்மை அணுகாவண்ணம் பாது காப்பர். அவரிடம் நம்பிக்கைவைத்து அவருடைய உதவியை நாடுவீராயின் நிச்சயமாய் உங்களது வாழ்க்கையை மாற்றி, அதனை மாசுபோக்கித் தூயதாக்கி வாழ்க்கையின் உண்மையான முடிவை அடையுமாறு செய்விப்பர்.

ஸ்ரீ இராம கிருஷ்ணர் யாவருக்கும் குரு. சாக்தர்களுக்கும், சைவர்களுக்கும், வைணவர்களுக்கும், இன்னும் இந்து மதத்தின் பல பிரிவினர்களுக்கும் குரு அவரே. திருத்த முற்ற இந்து மதச் சார்பினையுடையார் எல்லோர்க்கும் இனிய குரு நாதர் அவரே. பிற மதஸ்தர்களும் அவரது வாழ்க்கையையும் உபதேசங்

களையும் பக்ஷபாதமின்றி வாசித்தறிவார்களாயின் அவர்களும் அவரைக் குருவாகக் கொள்வதற்கு ஆக்ஷேபனையிராது. பக்தி சிரத்தையுடன் அவரை யணுகி அவரை ஞாஞசாரியராகக் கொண்டு அவர் காட்டிய நெறியில் ஒழுகுவோர் கடவுளை நாடினுஞ்சரி, முக்தி யளிக்கும் உயரிய ஞானப் பேற்றினை வேண்டினுஞ்சரி, புதுவாழ்வினைப் பெற்று மெய்யறிவு பெறுவர் என்பது உறுதி. ஆதலால் அஞ்ஞான விருளை யகல ஒட்டி முத்திப் பேற்றினைத் தருவதான அருள் ஒளியை அடைந்து அந்தமில் இன்ப ஆனந்தமுற விரும்புவோரெல்லாம் அவரைச் சரணடைந்து அவரைத் தமது குருநாதராகவும், வழிகாட்டியாகவும், ரக்ஷகராகவும் கருதித் தமது அவலக்கவலையை அடியோடு தொலைத்து அழிவிலாற்றலை யெய்தி நற்கதி பெறுவாராக.

ஓம் தத் ஸத்.

ஓம்

# நன் மாணவர் உபதேச ரத்னம்

1. உலகம் யாவும் மாயை. உலகம் மாறி மறையும். கடவுள் ஒருவரே நித்தியர்.

2. இதுவரை நியாய வாழ்க்கையில் ஒழுகாதிருப்பின் இப்பொழுதே புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பாயாக. உடனே எழு. தாமதம் செய்யாதே.

3. தீமை இழைத்தலினின்றும் விலகு. மனம் தூய்மை யடைவதற்காகக் கடவுளிடம் மன்றாடு. அதுவே உய்வதற்கு ஏற்ற வழி.

4. இவ்வுலக இன்பங்களை அனுபவிக்க விரும்பாதே. முடிவில் அவை துக்கத்தையே தரும்.

5. பக்ஷபாதமின்றி யிருத்தலே கடவுளை வழிபடுதலிற் சிறந்ததாகும். எல்லோரிடமும் சமதிருஷ்டியோடிருப்பாயாக.

6. வாயாலும் கிரியையாலும் பிறருக்குத் தீங்கு இழைக்காதே. வாய்த்தகாலத்து மன்னிப்பாயாக.

7. ஏழைகளுக்கும் வறியோர்களுக்கும் தானம் செய். அதுவே உனது மேலான நலத்திற்குரியதாகும்.

8. வினயம் கடவுளாலும் மனிதர்களாலும் விரும்பப்படுவது. ஆகையால் அகங்காரத்தை விட்டொழி.

9. அஞ்ஞான இருளால் சூழ்ந்த உலகிற்கு மகான்களே வழிகாட்டும் தீபங்கள். ஆகையால் அவர்களது உதவியை நாடு.

10. நல்லவனாக விருப்பதினாலும், நற்செய்கையாலும் சொல்லொணா வின்பம் உண்டாகிறது.

11. தாழ்ந்த ஜந்துக்களிடம் பிரியமாயிருத்தல் நற்குணத்தின் அறிகுறியாகும்.

12. ஞானத்தைப் பரவச்செய்து உலகைச் சூழ்ந்திருக்கும் துன்பங்களைக் குறைப்பாயாக.

13. நியாயத்தின் முன்பு வல்லமை அடங்கியிருக்க வேண்டும். நியாயம் வாகுபலத்தைவிட வன்மையுள்ளது.

14. நியாயமற்ற சிற்றின்பத்தில் ஒருபோதும் திளைக்காதே.

15. தர்ம வாழ்க்கைக்கு உண்மையே அஸ்திவாரம். ஆகையால் யோக்கியனாகவும் ஸத்தியவானாகவுமிரு.

16. உனது ஞாபகங்களும், எண்ணங்களும், கனவுகளும் சுத்தி செய்யப்படின் மாசற்ற பரிசுத்தனாவாய்.

17. உன் தீய மனதோடு போராடி, அதைத் தண்டித்துப் பரிசுத்தனாக்கிக்கொள்.

18. கடவுளை அர்ச்சிப்பதுபோல், உண்மை குருவையும் போற்றுவாயாக.

19. தீயாரோடிணங்கேல். இணங்கினால் அது உன்னை அழித்துவிடும்.

20. விளையும் பயனைக் கருதிப் பயப்படாமல் கடவுளை நம்பி, நியாயத்தைச் செய்வாயாக.

21. மூடன் உலகத்தாரது நல் அபிப்பிராயங்களை

விரும்புவான். அறிவாளி கடவுளின் அநுமதியை விரும்புவான்.

22. உண்மையான மதிப்பு வாய்ந்தவைகளைப் பெறு ; அவற்றை மதிப்பாயாக. பயனற்றவைகளை விலக்குவாயாக.

23. மனிதர்களுடன் கடவுள் புரியும் லீலைகளோ ஆச்சரியமானவை. இவற்றை அறிவாளிகள் அறிவ கள். அறிவில்லார் அறியார்.

24. அபரிமிதமாய் அன்னியர்களது பழக்கவ கங்களிற் பிரீதி கொள்ளுதல் திடசித்தமின்மையை தெரிவிக்கும். தான தர்மம் நம் கடமையாகும்.

25. நக்ஷத்திரங்களுக்கப்பாலும், கண்ணிற் பு படுபவைகளிலும், புலப்படாதவைகளிலும், உன் பத்திலும், உன் ஹிருதயத்திலுங்கூட கடவுளிருக்கி றார். அவரை மறவாதே.

26. கடவுளிடமும் கடவுள் வாழ்க்கையிடமு அவா கொள்ளுதல் உண்மை ஆரோக்யத்தின் யாகும். எவ்வளவுதான் அதைப் பெற்றாலும் அ அதிகமல்ல.

ஓம் தத் ஸத்.

# VEDANTIC WORKS

OF

## SRIMAT SWAMI YOGESWARANANDA

IN ENGLISH

*These are instructive, interesting and inspiring books, non-sectarian in nature.*

1. **The Future Life.**
   *Cr. 16mo 107 pages—Price 8 As.*
2. **Whispers of the Soul and other Discourses.**
   *Cr. 8vo 204 pages—Price Re. 1—4—0.*
3. **The Way to Salvation.**
   *Cr. 8vo 203 pages—Cloth Rs. 2—8—0.*
4. **Towards Light.**
   *Cr. 8vo 212 pages—Price Re. 1—8—0.*
5. **The Disciple's Lamp.**
   *Cr. 16mo 109 pages—Price 7 As.*
6. **All the World's a Stage.**
   *Cr. 16mo 211 pages—Price 12 As.*

*Postage in each case Extra.*

Apply for copies to :—

SRI RAMAKRISHNA MUTT,
ULSOOR, BANGALORE

OR

SRI RAMAKRISHNA MUTT,
**OFFICERS' LINES,**
BÈGAMPET, P. O., (DECCAN.)

Available also from Messrs. Higginbothams, Madras, Bangalore and other Places.

*N. B.*—Other books by the same author are in course of preparation.